# தமிழ் இனத்தை அழிக்கும் முயற்சியை நாம்தான் எதிர்த்தோம்; எதிர்ப்போம்

## முற்றவெளிக் கூட்டத்தில் எஸ். ஜே. வி. பேச்சு


Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

மலர் 12
இதழ்: 70
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

யாழ்ப்பாணம் சித்திரை 9 ஸபர் 15 புதன்கிழமை [22-4-70]



அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்


# இன்று நள்ளிரவுடன் கட்சி கொடிகள் மறைய வேண்டும்

## சுலோக அட்டைகள் வேட்பாளர் படங்களும் நீங்கவேண்டும்

### தேர்தல் சட்டம் தீவிர அமுல்

யாழ்ப்பாணம், புதன்

**இன்று நள்ளிரவு 12 மணியுடன் எந்தப் பொது இடத்திலும் கட்சிக் கொடிகள் தேர்தல் சுலோக அட்டைகள் வேட்பாளர் படங்கள் பிரசுரங்கள் இன்னோரன்ன தேர்தல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் இடம்பெறக் கூடாதென நாட்டிலுள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.**

'தேர்தல் சட்டத்தில் 52 [பி] விதியின்படி இன்று நள்ளிரவுக்குப் பின் எந்தப் பொதுஇடத்திலும் கட்சிக் கொடிகளோ, சுலோக அட்டைகளோ, பிரசுரங்களோ வேட்பாளர் படங்களோ வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமென்றும் இந்கல்தினமான நாளை, ஊர்வலங்களோ. மோட்டார் பவனிகளோ அனுமதிக்கப்படமாட்டாதெ[illegible]ம் வேட்பாளர்களின் கார்களில் மட்டும் தான் கட்சிக்கொடிகள் பற[illegible]க்க விடப்[illegible] எனவும் திரு. சுந்தர[illegible]கம் தெரிவித்தார்.

எந்தச்சந்தர்ப்பத்திலும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுதான் தலையாய கடமையாதலால் சட்டத்தைமீறுவோர்யாராயிருந்தாலும் கட்டாயம் அவர்[illegible]து தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் திரு. சுந்தரலிங்கம் எச்சரித்தார்.

## "தொண்டின் சின்னமாக அன்பைப்பெற்றேன்"

### வட்டுக்கோட்டையில் 'அமிர்'

சுழிபுரம், செவ்வாய்

"தேர்தல் காலத்தில் மட்டும் மக்களுடன் தொடர்பு கொண்டு சேவைசெய்வதாக வாக்குறுதியளிப்பவன் நான் அல்ல. எனது அரசியல் ஆரம்ப காலம் தொடக்கம் ஒரு கொள்கை வழிநின்று இலங்கை வாழ் தமிழ் சமூகத்துக்கு நான் தொண்டாற்றி வருகின்றேன். தொண்டின் சின்னமாக மக்கள்யாவரின் அன்பைத்தான் பெற்றுள்ளேன்."

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி வழக்கம்பரை வாலிப முன்னணி வட்டுக்கோட்டைத் தொகுதி தலைமை அலுவலகத்திறப்பு விழாவில் பேசுகையில் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். சுழிபுரம் கிராமசபை லும் தமிழ்மொழிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உரிய அந்தஸ்தை பெற்றுள்ளோம். சிங்களக் குடியேற்றத்தைத்தடுத்து அவ்வப் பகுதி மக்கள் குடியேற முதலிடம் பெற்றுக்கொடுத்தோம். நிபந்தனையோடு கூடிய ஆதரவைக்கொடுத்து, ஆதரவுதர மறுத்தபோது அரசாங்கத்தைவிட்டு வெளியேறினோம். தமிழ்பிரதேசத்தைக் கட்டிக்காத்துள்ளோம் என்றார்.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணம் ரஸிக

## "10 நாட்களில் தருவதாக ஜி. ஜி. சொன்ன திட்டம் எங்கே?" —அமிர்

யாழ்ப்பாணம், புதன்

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அதன் மொழியை அழித்துவிட்டால் போதும். இந்தத் திட்டத்தில்தான் கல்வி மந்திரி திரு இரியகொல்ல காரியங்கள் செய்கிறார். வடபகுதியில் 3 பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்து அதில் சிங்களத்தைப் போதனாமொழியாக்கி இங்குள்ள பாடசாலைகளில் சிங்களமே போதனா மொழியாக்கி இனத்தை அழிக்க அவர் திட்டமிட்டிருக்கிறார். இது விஷயத்தில் தமிழ் மக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.'

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் நேற்றிரவு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடந்த தமிழரசுக் கட்சியின் மாபெரும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளும், பெரியோர்களுமாகப் பெருந்திரளான மக்கள் கலந்த கொண்ட இக் கூட்டத்தில் பெற்றோரைத் தவறவிட்ட ஒரு குழந்தையை திரு அமிர்தலிங்கம் மேடையில் வைத்து அறிவித்துப் பெற்றோரிடம் சேர்ப்பிக்க வேண்டியேற்பட்டது.

கட்சி வேட்பாளர்களின் தலைமையில் ஐந்து பகுதிகளிலிருந்து ஊர்வலங்கள்கூட்ட மைதானத்தை வந்தடைந்தன முதலில்திரு தர்மலிங்கம் தலைமையில் வந்த ஊர்வலம் மைதானத்தை அடைந்தது. யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு எக்ஸ். மார்டின் தலைமையிலான ஊர்வலம்இரவு 12 மணிக்கு பின்னரே மைதானத்தை வந்தடைந்தது.

திரு செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் தமிழ்க் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தைக் கைவிட்டு விட்டதென்று வடக்கு மாகாணத்தையும் விரைவில் கைவிட்டுவிடுமென்றும் சொன்னார்.

இனம் மொழி, பிரதேசம் இம் மூன்றையும் காம்பாற்ற வேண்டுமென்றும் இவற்றை அழிக்க எடுக்கும் எந்த முயற்சியையும் தமிழரசுக்கட்சி தான் எதிர்த்துப் போராடியிருப்பதுடன் இனியும் போராடக் கூடியதும் அது ஒன்றே தானென்றார்.

வட்டுக்கோட்டை வேட்பாளரும் தமிழரசுக்கட்சி செயலாளருமான திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் தமிழரசுககட்சி செய்த சேவைகளைஎடுத்து கூறினார்.

அடுத்த தேர்தலில் தமிழ் காங்கிரசைத் தெரிவு செய்து அனுப்பினால் இரண்டரை வருடங்களுக்குள் தமிழ் மக்களின்இழந்த உரிமைகளைப் பெற்றுத்தர தவறினால் பதவியைத்துறப்பதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக நேற்றுமுன் தினம் இதேமைதானத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினாராம்' என்று குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம் தமிழ் மக்கள் உரிமைகளை இழக்கக்காரணமாகஇருந்த அவர் எந்த உரிமைகளைப்பெற்றுத் தரப் போகிறார் என்றுகேட்டார்.

'1957ம் ஆண்டில்பண்டா செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டதும் அது தமிழரை அழிக்கும் என்று கூறிய திரு. பொன்னம்பலம் அந்த ஒப்பந்தத்தைதகிழித்தெறிந்தால் 10 நாட்களில் மாற்றுத்திட்டம் தருவதாக இதே முற்றவெளியில் கூறினார். பத்து நாட்களல்ல .0 ஆண்டுகள் அல்ல 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் மாற்றுத்திட்டம் கொடுக்கவில்லை. இவர் தானா இரண்டரை ஆண்டுகளில் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுக்கப்போகிறார்' என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டார்.

'1965தேர்தலில் 3பேரை அனுப்புங்கள்3 மாதங்களில் உரிமைகளை பெற்றுத்தருகிறோம் என்று சொன்னவர்கள் என்னத்தைபெற்றுக கொடுத்திருக்கிறார்கள்' என்றும் திரு. அமிர்தலிங்கம் கேட்டார்

## 'நாட்டு மக்களுக்காக உயிரையும் விடத் தயார்'

### தேர்தல் கூட்டத்தில் ஆர்.ஜி.

அனுராதபுரம், செவ்.

'நாட்டுமக்களுக்காகநான் எவ்வித போராட்டமும் செய்யத்தயாராகவுள்ளேன் சுமண ரேவத்தையின் ஆசியுடன் திரு ஆர். ஜி. சேனநாயகா தமது தேர்தல் பிரசாரத்தை இன்று ஆரம்பித்

### விவசாயிகளுக்கு

## பயிற்சி வேண்டும் இ. ச. தீர்மானம்

உடுவில், செவ்.

'விவசாயிகள் விவசாயத்தில் அதிக அக்கறை கொண்டு உழைக்க வேண்டுமானால். அவர்களுக்கு கமத்தொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப முன்னணி வட்டுக்கோட்டைத் தொகுதி தலைமை அலுவலகத்திறப்பு விழாவில் பேசுகையில் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். சுழிபுரம் கிராமசபைக்கு அருகாமையிலுள்ள அண்ணு அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு பண்டிதர் ப. இராசகுரு தலைமைவகித்தார்.

உடுவில் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு வி. தர்மலிங்கம் பேசுகையில், ''தமிழ்அரசுக் கட்சியினர் சாதித்தது என்ன என்று மாற்றுக்கட்சினர் கேட்கின்றனர். நாம் நடாத்திய போராட்டங்களாலும் எமது ஒன்றுபட்ட பலத்தினு

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபா 19-வது ஆண்டு இசைவிழாவின் ஆரும் நாள் நிகழ்ச்சிகள் :-

6-30—7-45மேளம்: திரு எஸ் எம் இராசதுரை, ஏ. மகேந்திரன் — நாதஸ்வரம் திரு என் குமரகுரு, பி கணேசு தவில் 7-45 8-00 தலைமையுரை ராம் குமாரசாமி 8-00 — 9-15 பாட்டு திரு வி. வி தம்பு, 9-15 — 10-30 பாட்டு திருமதி சுரஸ்வதி பாகசிய ராசா

ளிரவுக்குப் பின் எந்தப் பொதுஇடத்திலும் கட்சிக் கொடிகளோ, சுலோக அட்டைகளோ, பிரசுரங்களோ வேட்பாளர் படங்களோ வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமென்றும் இந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தும்படி தனக்கு கீழ் உள்ள எல்லாப்பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருப்பதாக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் 'ஈழநாடு' நிருபரிடம் கூறினார்.

இன்று நள்ளிரவு தொடக்கம் ஊர்வலங்கள், ஆகியவற்றின் மீதான தடையும் அமுலுக்கு வரும்.

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் தினத்துக்கு முன்பு... னிகளோ அனுமதிக்கப்படமாட்டாதெ... வேட்பாளர்களின் கார்களில் மட்டும்தான் கட்சிக்கொடிகள் பறக்க விடப்படலாம் எனவும் திரு. சுந்தர...கம் தெரிவித்தார்.

வேட்பாளர்களின் கார்கள் தவிர்ந்த ஏனையோர்கார்களில் கட்சிக்கொடிகள் பறக்க விடப்படுவதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். வேட்பாளர்களின் சார்பில் தேர்தல் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுபவர்களின் கார்களிலும் கட்சிக் கொடி பறக்கவிடப்படலாம் ஆனல் சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்க தேர்தல் அதிகாரியினுல், குறிப்பிட்ட வேட்பாளரின்தேர்தல்பிரதிநிதியாக உத்தியோகபூர்வமாகஅங்கீகரிக்கப்பட்டபின்தான் இந்தச்சலுகை அமுலுக்கு வரும்.

'இதுவரை தேர்தல் பிரச்சாரத்தை அமைதியாகவும் ஒழுங்காகவும் நடத்த ஒத்துழைத்ததுபோல் நியமன தினத்தன்றும், அதன்பின்னரும் அமைதியையும், ஒழுங்கையும்நிலைநாட்டபரிபூரண ஒத்துழைப்பளிக்கும்படி எல்லா வேட்பாளர்களிடமும் வடமாகாணபொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கின்ருர்.

...யும் நிலைநாட்டுவதுதான் தலையாய கடமையாதலால் சட்டத்தைமீறுவோர்யாராயிருந்தாலும் கட்டாயம் அவர்மீதுதீவிர நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் திரு. சுந்தரலிங்கம் எச்சரித்தார்.

## திருட்டு

தாவடி, செவ்வாய்

திருநெல்வேலி கேணியடி வைரவராலயத்தில் பூட்டப்பட்டிருந்த மின்சாரமீற்றர், மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் பலவும்திருட்டுப்போயுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது

## பல்கலைக்கழக விசாரணைக் குழு அறிக்கை

கொழும்பு. புதன்

புதிய பல்கலைக்கழகத்தை எங்கு அமைப்பது என்பது பற்றி விசாரணை நடத்திய பல்கலைக்கழக விசாரணைக்குழு தனது இறுதி அறிக்கையை இன்றுஉயர்கல்விதேசிய சபையிடம் சமர்ப்பிக்கவிருக்கிறது. இந்தக்குழுவின் சிபார்சுகள் பற்றிய விபரம் இம்மாதம் 28ந் திகதி வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ...தேர்தல் கூட்டத்தில் ஆர்.ஜி.

அனுராதபுரம், செவ். 'நாட்டுமக்களுக்காகநான் எவ்வித போராட்டமும் செய்யத்தயாராகவுள்ளேன் எ... மக்களுக்காக உயிர்த்தியாகமும் செய்யத் தயங்கமாட்டேன்'

இவ்வாறு சிங்கள மகாஜனக்கட்சித்தலைவர் திரு ஆர் ஜி. சேனநாயகா கூறினார். அனுராதபுரம் ஸ்ரீமகாபோதி விகாரையில் வணசுமண ரேவத்தையின் ஆசியுடன் திரு. ஆர். ஜி. சேனநாயகா தமது தேர்தல் பிரசாரத்தை இன்று ஆரம்பித்தார்.

ருவென்வெலிசாயாவில் கைமுனுவின் சிலைக்கு முன் நின்றுகொண்டிருந்த திரு சேனநாயகா மக்களுக்காக தாம் உயிர்த்தியாகமும் செய்யத்தயார் என்று சபதம் செய்தார்.

## இ. ச. தீர்மானம்

உடுவில், செவ்.

'விவசாயிகள் விவசாயத்தில் அதிக அக்கறைகொண்டு உழைக்க வேண்டுமானல். அவர்களுக்கு கமத்தொழிலில் பயிற்சியளிக்கப்பட வேண்டும்' என்று மாவட்ட விவசாய ஆணையாளரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் உடுவில் கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது. தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமையில் கூட்டம் நடந்தது.

கொடிகாமம் பஸ்நிலையத்தில் கொலையுண்ட பஸ் சாரதியின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேறியது.

......

## முருகண்டிக்கருகில் காட்டு யானைகள் தொல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் - கண்டிப் பாதையில் 153வது மைல் கல் இடத்தில் காட்டு யானை ஒன்று கடந்த சில நாட்களாகத் திரிவதாகவும் சில பிரயாணிகளை இக் காட்டு யானை விரட்டிப்பயமுறுத்தியுள்ளதாகவும் நம்பகமாகத் தெரிகிறது.

இம்மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்துகண்டிககு வானில் சென்ற கம்பனியிலுள்ள ஒருபீடிக் கம்பனியின் உரிமையாளர் திருசபாரத்தினத்தைமுருகண்டி கோயிலுக்கருகில் 153 வது மைல் கல் இடத்தில் காட்டு யானையொன்று தனதுவானையும் இன்னும் நாலைந்து பயணிகளின் கார்களையும் துரத்தியதாகவும் முருகன் கடாட்சத்தால் உயிர் தப்பினேம் என்றும் அறிவித்திருக்கிருர்.

யாழ்ப்பாணம் கண்டிப் பாதையில் கார்வழிப் பிரயாணத்தை மேற்கொள்பவர்கள் இவ்விடத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பொலிஸ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 25-ம் திகதி நடைபெறும் என்று நேற்றுப் பிரசுரமான செல்வி கிருஷ்சாந்தி சேனுதிராசாவின் நாட்டிய அரங்கேற்றம் மேமாதம் 20-ம் திகதிதான் நடைபெறும்.

## கூட்டணியினர் கொள்கை அறிக்கை

# கச்சேரி முறைமுற்ருகவே மாற்றி அமைக்கப்படும்

கொழும்பு, செவ்.

கச்சேரி முறை காலனி ஆட்சியாளரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டதாகும். இன்றையதேவைகளை நிறைவேற்றுவதற்கும் இம்முறை முற்ருகவே பொருத்தமற்றதாகவிருக்கின்றது. எனவே இந்த முறையை மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக இம்முறையை மாற்றி அமைப்போம்.

இவ்வாறு கூட்டணிக்கட்சியினர் விடுத்துள்ள தேர்தல் கொள்கை அறிக்கையில் கூறியுள்ளனர்

தெரிவுசெய்யப்பட்ட ஊழியர் சபைகளை நிறுவியும் அரசாங்க அலுவலகங்களில் ஆலோசனைசபைகளை நிறுவியும் தொகுதிவாரியாக மக்கள் குழுக்களை நிறுவியும் கச்சேரிமுறைக்கு புதுத் தோற்றம் அமைக்கப்படுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

கூட்டணிக் கட்சியினர் விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

தோட்டப் பாடசாலைகள் யாவும் தேசியமயமாக்கப்படும் வங்கிகள் தேசியமயமாக்கப்படும் நிர்வாகத்தில் மக்களுக்கு அதிகபங்கு வாரத்தில் இரண்டு கொத்து அரிசி, சிங்கள நிர்வாக மொழி சட்டத்துடன் தமிழ்மொழி விசேட ஷரத்து சட்டம் பூரணமாகவும் நியாயமாகவும் அமுல் நடத்தப்படும், ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் வார்த்தைக்கு வார்த்தை அமுல்செய்யப்படும். சிறுபான்மையினர் ஆதரவுடன் தேசிய ஒற்றுமை நிலைநாட்டப்படும். குடியரசு பிரகடனம். உயர்கல்வி சட்டம் ரத்து செய்யப்படும், வடக்கு, கிழக்கு. தெற்கில் மூன்று பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும். உள்நாட்டு உற்பத்திக்கு விலைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படும், இஸ்ரேலுடனன ராஜியத் தொடர்புகள் ரத்துச் செய்யப்படும்.

—

## துரையப்பாவின் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், திங்க

யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளர் தி... அல்பிரட் துரையப்பாவின் கட்டுப்பணத்தை குருநகர் வாழ் மக்கள் கட்டியுள்ளனர். குருநகர் மக்கள் திரு. துரையப்பாவின் கட்டுப்பணமான ஆயிரம் ரூபாவை தாங்களேசேர்த்துநகரசபை உறுப்பினர் திரு. எம். எஸ், பேரின்ப நாயகத்திடம் கையளிகக அவர் அதனை கச்சேரியில் செலுத்தினர்.

## 'ஒத்துழைக்கும் கட்சிகளுக்கு ஆதரவு கொடுப்பேன்'

### ஜின்ஞ மைதானக் கூட்டத்தில் துரையப்பா

யாழ்ப்பாணம், புதன்

'மக்கள்பணியேஎனதுஇலட்சியம் தமிழரசுக்கட்சியும் தமிழ்காங்கிரஸ் கட்சியும் எனக்குத் தந்துகொண்டிருந்த நெருக்கடியால், இன்று எனது ஆதரவு பெருகிக கொண்டே போகிறது. இனியாவது எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியும் என்னுடன் ஒத்துழைத்தால், நான் அவர்களுடன் சேர்ந்துழைககத் தயங்கமாட்டேன்'

யாழ்ப்பாணம் ஜின்ஞ மைதானத்தில் நடைபெற்ற தேர்தல்பிரசார கூட்டத்தில் யாழ்ப்பாணம் தொகுதியில் சுயேச்சையாளராகபோட்டியிடவிருககும் திரு அல்பிரட துரையப்பா இவ்வாறு கூறினர்

மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம் ஸி. பஸீர் தலைமையில் நடைபெற்ற இக கூட்டத்தின் முன்திரு துரையப்பா ஊர்வலமாகஅழைத்துச் செல்லப்பட்டார்' பெருந்திரளான மககள்

(4-ம் பக்கம் பார்க்க)

# சங்கிலியம்

### காவிய வெளியீடு



கவிஞர் காரை செ. சுந்தரப்பிள்ளைஎழுதியதும் 'ஈழநாடு' காவியப் போட்டியில் முதற்பரிசு பெற்றதுமான. 'சங்கிலியம்' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை ஈழநாடு காரியாலய முன்றலில், ஆசிரியர் கே. பி. ஹரன் தலைமையில் நடைபெறும்.

### நிகழ்ச்சி நிரல்

தமிழ் வாழ்த்து: கவிஞர் இ. நாகராஜன்
வரவேற்புரை திரு து. சீனிவாசகம் ஜே.பி.
வெளியீட்டுரை: இரசிகமணி கனக செந்திநாதன்
முதற்பிரதி பெறுபவர் திரு. ச. வரதராசன்
பயஓதல்: கவிஞர் வே. ஐயாத்துரை
ஆய்வுரை: வித்துவான் க. கி. நடராஜன் பி ஓ எல். பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் வி. கந்தவனம் பி ஏ.
நூலாசிரியருரை
நன்றியுரை; ஆசிரியமணிநா, தம்பிரத்தினம்

யாழ். மத்திய, யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையே அண்மையில் நடந்த கிரிக்கெட் மோதலைப்பற்றி ஈழநாடு 'றுப்பி' அட்வட்டைஸர்ஸ் ஆதரவுடன் நடாத்திய கிரிக்கெட் புதிரில் வெற்றிபெற்ருேருக்குப்பரிசில்கள் வழங்கப்படும்.

# குடியேற்றக் காணிகளுக்கு விரைவில் காணிக்கச்சேரி

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணப் பகுதியில் அமைக்கப்பட்ட 3 வீடமைப்புத் திட்டங்களுக்கான காணிக்கசசேரிகள் மிக விரைவில் நடைபெறவிருக்கின்றன இதற்கான அறிவித்தல் ஒன்றை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் காரியாதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.**

குருநகர், பண்ணை பள்ளிவெளி, அராலி வீதியில் உள்ள பொம்மைவெளி ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுககான காணிகளை அரசாங்கம் சட்டரீதியாகப் பொறுப்பேற்றுள்ளபடியால் அவற்றுககாக காணிக் கச்சேரிகளை நடாத்தும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எவ்.ஸி. பீட்டர்ஸ் யாழ்ப்பாணபகுதி காரியாதிகாரிககு அறிவித்துள்ளார். காரியாதிகாரி இது சம்பந்தமாக தமது பிரிவு கிராம சேவையாளருககு அனுப்பியுள்ள சுற்றறிககையில் வீடமைப்புத் திட்டக காணிகளுககு விண்ணப்பித்தவர்களுககு இதை அறிவிககும்படி கேட்டுக கொண்டுள்ளார்.

குருநகர் வீடமைப்புத் திட்டத்துக்கென அரசாங்கம் ஏற்கனவே ஒதுககிய மூன்றரை ஏககர் காணியை விட, இரண்டு ஏககர்காணி மேலும் ஒதுககப்பட்டுள்ளது அரசாங்க விறகுகாலைககு கிழககே ஒதுககப்பட்டுள்ள இககாணியில் விளையாட்டுமைதானத்தையோ அல்லது தேவாலயத்தையோ அல்லது விளையாட்டுமைதானமும் பாடசாலையுமோ இங்கு குடியேறுபவர்களின் விருப்பப்படி நிறுவலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது. விரும்பினுல் இந்த 2 ஏக்கர் காணியில் வீடமைப்புத் திட்டத்தை அமைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவெளியில் நிறுவப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் குடியேற்றப்படுவார்கள். அராலிவீதி பொம்மைவெளியில் ஒதுக்கப்பட்ட 12 ஏக்கர் காணியில் 8 ஏக்கர் முஸ்லீம் மக்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்படும். மிகுதி 4 ஏககரில் நாவாந்துறையைச் சேர்ந்த மககள் குடியமர்த்தப்படுவர் என்றும் தெரிவிககப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

கொம்மர் 15 அந்தர் டீசல் வான் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், நல்லூர், யாழ்ப்பாணம். 2059

வீடு:

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள், சகல வசதிகளுடனும் 19, ஆரியர் வீதி கொழும்புத்துறையில் கல்வீடு உட்பட 2 1/2, பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு S. கனகசபாபதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2058

காணி:

பளை - டி. ஆர். ஓ. கந்தோர் அமைந்துள்ள கட்டிடமும் அதைச் சேர்ந்த காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் S. சபாரத்தினம், பச்சிலைப் பள்ளி யூனியன், பளை. 2043

**திருமண அழைப்பு**

நல்லூர் முருகேசர் ஒழுங்கையைச் சேர்ந்த ஆயுர்வேத டாக்டர் திரு. கந்தையா குணரத்தினத்திற்கும், சட்டநாதர் வீதியைச் சேர்ந்த தா. சி. கந்தையா தம்பதிகளின் புதல்வி ஆனந்தலக்ஷமிக்கும் 25-4-70 சனிக்கிழமை இரவு 10-30-க்கும்12-00க்குமிடையில் மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழும். உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்படுகின்றனர். கந்தையா தம்பதிகளும்-திருமதி செ. கந்தையாவும் . 2109

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**பட்டதாரிப் பகுதி**

ஜி. சி. இ. (உயர்தரம்)
பிரவேசம் - மே 1970

விபரங்களுக்கு -/50 சதத் தபாற்கட்டளையுடன் சொந்த விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டியதுமான நீண்ட தபாலுறை அனுப்புதல் வேண்டும்.
விண்ணப்ப முடிவு திகதி மே, 4-ந் திகதி.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை.
2215

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
ஆனந்தன் - நம்பியார்
நடித்த
**நீயா நானா?**

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா.போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
**நீயும் நானும்**

**REGAL JAFFNA**
Daily 4-45, 7&9-45 p.m.
THE SPARTAN GALDIATORS

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
THEY CAME TO ROBLASVEGAS
(colour)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 8 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
**ஹரிச்சந்திரா**

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த
**திருடன்**


# மக்கள் வெள்ளத்தை கண்டு கண் கலங்கினார் ஜி. ஜி.!

## யாழ். முற்றவெளியில் மாபெரும் காங்கிரஸ்கூட்டம்



இம்மாதம் 23ம் திகதியோடு, தேர்தல் சட்டத்தின்படி ஊர்வலங்களுக்குத்தடை விதிக்கப்பட்டிருப்பதால் அதற்கு முன்பு ஆதரவாளர்களினதும், அபிமானிகளினதும், உணர்ச்சி வெள்ளங்களையெல்லாம் ஒன்று திரட்டி, 'பாரீர், பாரீர் எங்கள் பலம் பாரீர்' என்று பறைசாற்றிய பலப்பரீட்சை நடத்திட இரு பெரும் கட்சிகளான தமிழ்க்காங்கிரஸும், தமிழரசுக் கட்சியும் கச்சைகட்டிக் கொண்டு நிற்கின்றன.

தொகுதிக்குத் தொகுதி ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக்கொண்டு, டிராக்டர் ஊர்வலம், சைக்கிள் ஊர்வலம், மோட்டார் ஊர்வலம், மாட்டு வண்டி ஊர்வலம். என்ற இன்னோரன்ன ஊர்வலங்களை நடத்தி அவற்றிட்கெல்லாம் மகுடம்வைத்தால் போல தமிழ்ப் பிரதேசத்தின் தலைநகராம் யாழ்நகரில் எல்லாத் தொகுதிகளையும் ஒன்று சேர்த்து, ஒரு மாபெரும் ஊர்வலத்தையும், முற்றவெளியில் ஒரு பொதுக் கூட்டத்தையும் நடத்தி, யார்கை ஓங்கிநிற்கிறது என்பதைக் காட்டத் துடிக்கின்றன தமிழரசும், தமிழ்க்காங்கிரசும்,

இம்மாதம் 20 திகதி தமிழ்க்காங்கிரஸும் 21ம் திகதி தமிழரசுக்கட்சியும், முற்றவெளியில் முனியப்பர் சாட்சியாகத் தமிழ் மக்களைக் சந்தித்தன, 20ம் திகதி நடந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தைப் பற்றிய எனது நோக்கு இது.

''அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் அரசோச்சிய காலகட்டமான 1956-ம் ஆண்டுக்குப்பின், அவர்கள் நடத்திய கூட்டங்களிலேயே அதிசிறப்பு வாய்ந்த கூட்டம், யாழ்ப்பாண முற்றவெளியில் நடந்த வேட்பாளர் அறிமுகக் கூட்டம்தான். இவ்வளவு சிறப்பாகவும், ஒழுங்காகவும், பிரமாண்டமான ரீதியிலும், தமிழ்க்காங்கிரஸின்கூட்டம் 1956க்குப்பின் நடக்கவேயில்லை.''

இவ்வாறு, இம்மாதம் 20-ம் திகதி யாழ். நகரில் நடந்த தமிழ்க்காங்கிரஸின் பிரமாண்டமான ஊர்வலத்தையும் யாழ்ப்பாண முற்றவெளியில் நடந்த வேட்பாளர் அறிமுகக்கூட்டத்திற்காக வெள்ளம்போல் திரண்டு வந்திருந்த மக்கள் கூட்டத்தையும் பார்த்துப் பிரமித்த மாற்றுக்கட்சி ஆதரவாளர் ஒருவரே என்னிடம் வியந்து கூறிப்போற்றிப் பாராட்டினார்.



**யாழ். இந்துக் கல்லூரி வீரர்**

இலங்கைப் பாடசாலைகள் கோஷ்டிக்கும், விளையாட்டு அமைச்சின் தெரிவுக் கோஷ்டிக்கும் இடையிலான கிரிக்கெட் மோதல் நேற்று ஓவல் மைதானத்தில் நடைபெற்றதல்லவா?

இதில் விளையாட்டு அமைச்சர் தேரிவுக் கோ[illegible]யில் அங்கம் வகிக்கும் [illegible]றந்த துடுப்படி வீரரான யாழ்ப்பாண இந்துக் கல்லூரியை சேர்ந்த சின்னத்தம்பி நகுலேந்திரன் தேர்ந்தேடுக்கப்பட்டிருந்தார்.

### அதிகாலையிலிருந்து ஆதரவாளர் திரண்டனர்

அந்த அளவுக்கு சிறப்பாகத் தடபுடலாக நடந்தது. ஊர்வலம்- தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடும் வட்டுக் கோட்டை, நல்லூர் உடுவில், காங்கேசன்துறை, சாவகச்சேரி கோப்பாய் உடுப்பிட்டி. பருத்தித்துறை ஊர்காவற்றுறை. வவனியா கிளிநொச்சி ஆகிய தொகுதிகளிலிருந்து அதிகாலையில் இருந்தே ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில்வந்து சேர்ந்தனர்.

மாலையில், வெவ்வேறு முனைகளிலிருந்து ஆரம்பித்த ஊர்வலங்கள் நகரின்முக்கிய தெருக்களினூடாக எல்லாம் வலம் வந்து இரவு எட்டு மணிக்குமேல் ஒவ்வொரு ஊர்வலமாக முற்றவெளியை வந்தடைய ஆரம்பித்தன. திரு. ஜி. ஜி.பொன்னம்பலம் வந்த இறுதி ஊர்வலம் முற்றவெளியை வந்தடைந்தபோது இரவு மணி பத்தரை! கூட்டமெல்லாம் முடியும்போது அதிகாலை மணி இரண்டுக்கும் மேலாகி விட்டது!

நல்லவேளையாக, தனிப் பெருந்தலைவரின் ஊர்வலம்

தலைவர். திரு. ஆர். எம். சிவப்பிரகாசம்.

### பண்டிதர் இளமுருகன்

முதலில் பேசியவர் பண்டிதர் இளமுருகனார், நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் தனித்தமிழ்ப்பிரியர். சமஷ்டிக்கட்சி என்ற பெயர் இவர் வாயில் நுழையாததால், தனித்தமிழ்ப் பெயராக தமிழரசுக்கட்சி என்று அக்கட்சிக்கு பெயர்வைத்ததும் இவர்தானும். 'தந்தை செய்த பிழையைப் பகிரங்கமாக எடுத்துக்கூறி மன்னிப்புக் கேட்க வந்த மைந்தன்' என்று தலைவரால் அறிமுகப்படுத்திவைக்கப்பட்ட இளமுருகனார், [illegible]ன்நாக்கு தனித்தமிழையே உச்சரிக்கப் பழகிக்கொண்ட நாக்கு என்று [illegible] ''சமட்டிக் கட்சிக்கு தமிழரசுக்கட்சி என்ற பெயரை [illegible]ன் வைத்த போது, டாக்டர் நாகநாதன்

### நூர் முகமது

அடுத்து நூர்முகமது என்பவர் தோன்றி, தமிழ் காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்கும், வன்னி தந்த கன்னித் தமிழ்க்காளை மகன் (ஆம்-இப்படித்தான் அவர் சொன்னார்) வவனியா சிவசிதம்பரத்தின் தேர்தல் பிரச்சாரத்திற்கும் தான் செய்த சேவைகளைப்பற்றி 'சுயபுராணம் பாடி, ஆமை ஆயிரம் முட்டை யிட்டாலும் அமைதியா இருக்கும், கோழி ஒரு முட்டையிட்டாலும் கொக்கரிக்கும் என்பதைப் போல, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் முஸ்லிம் மக்களுக்கும், தமிழினத்துக்கும் எவ்வளவு சேவைகளைச் செய்திருக்கிறார் என்று, அடுக்கு மாடிக் கட்டிடமான ஆஸ்பத்திரியைப் பாருங்கள், பொம்மை வெளியை நோக்குங்கள்,



தமிழரசுக்கட்சியினது அரசியல் வாழ்வில் இரகசிய ஒப்பந்தங்களை நிறைவேற்றாத இரகசிய ஒப்பந்தங்களைத் தவிர-வேறு எதுவுமே செய்யப்படவில்லை என்று சொன்ன நடராஜா, 'தமிழரசுக் கட்சிக்காரர்களால் இப்பொழுது இராணுவத்தினர் சந்திகளிலும் சந்துபொந்துகளிலும் மக்களை அடிக்கிறார்கள்! இன்னொரு முறை போனால் வீட்டுக்குள் புகுந்தும் அடிப்பார்கள்.' தெருவழியே, திண்ணை வழியே றோட்டிலே அடி வாங்க வேண்டுமானால் தமிழரசுக்கடசிக்கு வாக்களியுங்கள்' என்று சொன்னார்.

### ஆனந்தசங்கரி

அடுத்த பேச்சாளரான ஆனந்தசங்கரியை அழைக்குமுன் 'வடமராட்சி இதுவரை நெடுவல்களையே ஆட்சிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறது. அன்பர்களே! இந்த முறை நெடுவலோடு ஒரு கட்டையரையும் அனுப்பப்போகிறது' என்று கைதட்டுகளுக்கிடையே அறிவித்தார்.

"கிளிநொச்சித் தொகுதியில் பண்டிதரை கிலிகொள்ளவைத்து அத்தொகுதியைவிட்டு அவரை ஓடவைத்த ஆனந்தசங்கரி' என்று அடுத்த பேச்சாளரான கிளிநொச்சித் தொகுதி வேட்பாளரை அறிமுகப்படுத்தினார் உடுப்பிட்டிச் சிவசிதம்பரம்

வவனியாத் தொகுதியிலே சிவசிதம்பரத்துக்கு 'ரைற்' உடுப்பிட்டியிலே சிவசிதம்பரத்துக்கு 'ரைற்' யாழ்ப்பாணத்திலே இந்தமுறை ஜி. ஜி. பொன்னம்பலத்துச்

நமது நிருபர்
பெ. [illegible]லிங்கம் -

### பொன்னம்பலம் ஆரம்பஉரை

முகத்தை மறைத்த மலர் மாலைகளை சுமக்க முடியாமல் சுமந்தபடி, கூப்பிய கரங்களுடன், மிகவும் களைத்துப் போனவராய் 'ஜே' கோஷங்களுக்கிடையே மேடைக்கு வந்து சேர்ந்தார் ஜி. ஜி.

உணர்ச்சி வசப்பட்டவராய்-கண் கலங்கிய நிலையில் திரண்டு நின்ற மக்கள் வெள்ளத்தைப் பார்த்து, 'என் தாய்க் குலமே! என்று ஆரம்பித்தார் ஜி ஜி. 'நான் 40 வருஷ காலமாக அரசியலில் ஈடுபட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு நான் பெற்ற வரவேற்பைப்போல ஒரு நாளும் பெறவில்லை. அடியேன் தமிழனாகப் பிறந்ததால், என் இனம் குறைந்த இனமாக வாழக்கூடாது என்பதற்காகவே உழைத்திருக்கின்றேன். இன்றைய வரவேற்பைப் பார்த்த பின் நான் நாளைக்கு இறக்கஆயத்தம்(ஆரவாரம்) இன்றைய வரவேற்பு நான் இத்தனை காலமும் செய்த சேவையை ஒரு சிலராவது உணர்ந்திருக்கின்றனர் என்பதை நன்றாகக் காட்டுகிறது. (கைதட்டல்) நான் இறக்கு மட்டும் உங்களுக்கு அடிமை' (ஆரவாரம்) என்று கூறிவிட்டு, தான் மிகவும் களைத்துப் போய் வந்திருப்பதால், மேடைக்குப் பின்னால் போய் உடுப்பை மாற்றிக் கொண்டுவர கூட்டத்தினரிடம் அனுமதி கேட்டுக் கொண்டு சென்றார்.

திரும்பி வரும்வரை ஆனந்தசங்கரி பேச, ஜி ஜி. திரும்பிவந்தபின், அரசியல் ஞானம் மிக்க ஐந்துவயதுச் சிறுமி ஐந்து நிமிடம் பேசுவாள் என்று அறிவித்து ஒரு சின்னஞ்சிறு சிறுமியை மேடையில் நிறுத்தி, அவள் உயரத்துக்கு 'மைக்' கையும் குறைத்துக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி 4 காட்சிகள் நடித்த

# திருடன்

## யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி

மனேகர், நிர்மலா, ஓ. ஏ. கே. தேவர்

ஹரி கிருஷ்ணன்

மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெற்றிமுரசுகொட்டும்

101வது தினம்

கெப்பிட்டல்

(கொழும்பு)

மகத்தான 70-வது தினம்

வெலிங்டன் யாழ்ப்பாணம்


தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய

ஜனுதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற

வெற்றிச் சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்

மற்றுபலர் நடித்த

# தில்லானு மோகனும்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

கிங்ஸ்லி பிளாஸா ஸ்ரீகிருஷ்ண

(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்

ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணநிதி

நடித்த

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்

ச்சர் தேரிவுக் கோ[...]யில் அங்கம் வகிக்கும் [...]றந்த துடுப்படி வீரரான யாழ்ப்பாண இந்துக் கல்லூரியை சேர்ந்த சின்னத்தம்பி நகுலேந்திரன் தேர்ந்தேடுக்கப் பட்டிருந்தார்.

சின்னத்தம்பி நகு[...]லந்திரன் சிறந்த துடுப்படி வீரர் தனது கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்கும் தலைமை வகித்து விளையாடியிருக்கிருர்.

தடைந்தபோது இரவு மணி பத்தரை! கூட்டமெல்லாம் முடியும்போது அதிகாலை மணி இரண்டுக்கும் மேலாகி விட்டது!

நல்லவேளையாக, தனிப் பெருந்தலைவரின் ஊர்வலம் வரும்வரை காத்திராமல், எட்டு மணிக்கு முதல் ஊர்வலம் வந்து சேர்ந்தவுடனேயே பொதுக்கூட்டத்தையும் ஆரம்பித்துவைத்தார்.

முருகனுர், [...]ன்நாக்கு தனித் தமிழையே [...]உச்சரிக்கப் பழகிக்கொண்ட நாக்கு என்று சொல்லி, ''சமட்டிக் கட்சிக்கு, தமிழரசுக்கட்சி என்ற பெயரை [...]ன் வைத்த போது, டாக்டர் நாகநாதன் அவரை அப்படியே கட்டி, அலாக்காக மேலே தூக்கி ஆனந்தப்பட்டு டைரியிலும் குறித்துக்கொண்ட கதையையும், அதன் பின்பே தமிழரசு என்ற பெயர் வழங்கி வந்த கதையையும் அவிழ்த்துவிட்டார்.

''பரமார்த்த குருவின் சீடர்கள் குதிரைக்கணக்குப் பார்த்த கதையாய், ஒரு லட்சம் மலைநாட்டுத் தமிழ் மக்களை நாடு கடத்த ஒத்துழைத்ததற்காக, விலகிச் சென்றவர்கள் ஐந்தரை லட்சம் மக்களை நாடுகடத்தக் கைதூக்கிவிட்டார்கள்'' என்று தமிழரசுக்கட்சியையும் அவர் சொன்னபடி 'ஹோலி பாதரை'யும் குறை கூறினர்.

தமிழரசுக் கட்சிக்குமுதன் முதலில் நந்திக் கொடியையேதான் பலத்த ஆராய்ச்சிக்குப் பின் சிபார்சு செய்ததாகச் சொன்ன இளமுருகனுர், அதன்படி சென்னையில் 4000 நந்திக் கொடிகள் அச்சடிக்கப்பட்டு, தமிழரசுக் கட்சியின் கூட்டங்களில் பாவிக்கப்பட்டதாகவும், அதற்கப்புறம் யாரோ நந்திக் கொடியில் சைவ சமய வாடை வீசுகின்றது என்று சொன்னவுடன் மூச்சுப்பேச்சில்லாமல் அடுத்தவர்களுக்கே தெரியாமல் நந்திக் கொடியை நழுவ விட்டு விட்டார்கள் என்று கூறி, ''தமிழரசுக் கட்சியினர் தங்கள் தங்கள் தாலிக் கொடிகளைக் காப்பாற்றுவதில் தான் முன்னிற்கின்றனர்'' என்று சொல்லி முடித்தார்.

லிம் மக்களுக்கும், தமிழினத்துக்கும் எவ்வளவு சேவைகளைச் செய்திருக்கிருர் என்று, அடுக்கு மாடிக் கட்டிடமான ஆஸ்பத்திரியைப் பாருங்கள், பொம்மைவெளியை நோக்குங்கள், பூநகரி குடியேற்றத் திட்டத்தைச் சிந்தியுங்கள், வீட்டுத் திட்டத்தை மறக்காதீர்கள் என்று அடுக்கு மொழியில் திறந்தவெளியில் நிறைந்திருந்த மக்களைப் பார்த்து அடுக்கித் தீர்த்தார்.

ஐ. நா.வில் சென்று முழக்கமிட்டவர் எங்கள் தலைவர் சதிகாரக் கும்பலை நிரபராதியாக்கியவர் எங்கள் தலைவர் என்றும் தலைவர்புகழ்பாடத் தயங்கவில்லை ஜனுப் நூர் முகமது!

### பருத்தித்துறை நடராசா

அடுத்து பருத்தித்துறை காங்கிரஸ் வேட்பாளர் நடராசா தான் உருவத்தில் கட்டையானவர் என்பதால் ஆட்சிமன்றத்திற்குப் போக தகுதியில்லை என்று அமிர்தலிங்கமும் ஆலாலசுந்தரமும் பிரசாரம் செய்கிருர்களாம் நான் அஞ்சடிக் கட்டை தான்; ஆனல் அஞ்சாத கட்டை; அடிவாங்காத கட்டை என்று எடுத்த எடுப்பிலேயே ஒரு போடு போட்டுவிட்டு அறிஞர் அண்ணவைப்பாருங்கள் அவரும் கட்டை எங்கள் தலைவர் பொன்னம்பலத்தைப் பாருங்கள் அவரும் கட்டைதான் என்றுசொல்லி நாகூசிற்ருே என்னவோ அவரைக் கட்டை என்று சொல்ல விரும்பவில்லை ஆனல் நெடுவல் அல்ல என ஒரு சிறுதிருத்தத்தை மக்களின் சிரிப்பொலிக்கிடையே செய்தார்.

உடுப்பிட்டியிலே சிவசிதம்பரத்துக்கு 'ரைற்' யாழ்ப்பாணத்திலே இந்தமுறை ஜி. ஜி. பொன்னம்பலத்துக்

நமது நிருபர்

- பெரி. சுந்தரலிங்கம் -

கும் 'ரைற்' தான் என்று எதிர்க்கட்சியினர் பிழையான பிரச்சாரம் செய்கின்றனர். யாருக்கு 'ரைற்' யாருக்கு 'லூஸ்' என்பதை மக்கள் தீர்மானிக்கத்தான் போகின்றனர் என்று ஆரம்பித்தார் ஆனந்தசங்கரி.

ஜி. ஜி. போட்டியிடும் கடைசித் தேர்தல் இது வாகையால் அவரை வெற்றி பெறச்செய்யுங்கள், அவரைத் தலைவராகத் தமிழினம் ஏற்க இதுவே தக்கதருணம் என்று வேண்டுகோள் விடுத்த ஆனந்தசங்கரி, 1956-ம் ஆண்டிலிருந்து தமிழரசுககட்சியினர் நடத்திய போராட்டங்களினல் தமிழ் மக்கள் எவ்வித நன்மையும் பெறவில்லை; மாருகத் தீமையே ஏற்பட்டிருக்கிறது எனக்காட்ட முனைந்தார்.

### காதைக் கடித்தவனின் பல்லை கழட்டவில்லையே!

''கால்பேஸ்திடலிலே எனது காதில் ஒரு துண்டைச் சிங்களக் காடையன் பறித்துவிட்டான் என்று இங்கு வந்து ஓலமிடுவது வீரமா? அல்லது காதைக் கடித்தவனின் பல்லைக் கழட்டிக்கையில் கொண்டுவந்திருக்கிறேன்'' என்று காட்டுவது வீரமா? என்று கேட்ட இவர் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினருக்கு ஐந்தாண்டு அவகாசம் கூட வேண்டாம். ஆகக் குறைந்தது 10 பேரைத் தேர்ந்தெடுத்து இரண்டே இரண்டு ஆண்டுகள் கொடுங்கள் அதற்குள் தமிழர்களின்இழந்த உரிமைகளைப்பெற்றுத்தரஎங்களால் முடியாவிட்டால் கட்டாயமாகச் ராஜிஞமாச்செய்து விடுகிருேம் என்று சத்தியவாக்காகச் சொன்னர்.

''1960-ம் ஆண்டு கச்சேரி வாசலிலே தமிழரசுக்கட்சியினர் மகத்தான மூன்றும் வாரம் வெற்றிகரமான நான்காம் வாரம் (கூட்டத்தில் சிரிப்பு) என்று நடத்திய சத்தியாக்கிரகத்தில் தானும் கலந்துகொண்டதை வெட்கத்தோடு ஒப்புக்கொண்டார்.

இவர் பேசிக்கொண்டிருக்கும்போது இரவு பத்தரை மணியளவில்ஜி. ஜி.யின் ஊர்வலம் மைதானத்தை வந்தடைந்தது. ''யாழ்நகர் கண்டிராத அளவுக்கு இலட்சோபலட்சம் மக்கள் கலந்து கொண்ட மகத்தான ஊர்வலம்'' என உடுப்பிட்டி சிவா வர்ணித்தார்.



### சிறுவர்படை

அந்தச் சிறுமியோ தனது சொற்திறனல் கூட்டத்தையேஒருகலக்குகலக்கிவிட்டாள் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்பது எங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டு தன்னை விஷயமறியாச்சிறுமி என்று ஒதுக்கித் தள்ளிவிட மங்கையர்க்கரசி அக்கா முயற்சித்ததை 'நாங்கள் விஷயமறியாச் சிறுமிகளா? கற்ருேரும் பெரியாரும் உங்களைத் திருத்தாவிட்டால் நாளைய சந்ததிகளான நாங்கள் தானே உங்களைத்திருத்த வேண்டும்; இதிலென்ன தவறிருக்கிறதுஎன்று ஆணித்தரமாக அழகு தமிழில்' கடல் மடைதிறந்தாற் போல வாரிவழங்கினுள் கருத்துக்களை.

அவள் பேசி முடிந்தவுடன் ஜி.ஜி. அன்புடன் அணைத்து உச்சிமுகர்ந்து பாராட்டினுர்.

அடுத்து இன்னெரு சிறுவனை மேடைற்றியே5 நிமிட அவகாசம் அளித்தார். அந்தப்பையனே அடுக்குமொழியிலே எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கெல்லாம் தொகுதி தொகுதியாக அடைமொழி கலந்த வசைமொழி வழங்கினன் உதாரணமாக யாழ்ப்பாணத்திலே துரோகப்பா, உடுவிலில் 'அரைக் கம்யூனிஸ்டு, குறைவழக்கறிஞர் தர்மலிங்கம்' நல்லூரில் நாகாக்க நாகநாதன் இத்தியாதி படடங்களை அனுயாமாக வாரி வழங்கினன்.

### வவனியா சிவசிதம்பரம்

அடுத்து வவனியாச் சிவசிதம்பரம் பேச ஆரம்பித்தார். 12 தொகுதியிலும்11 தொகுதியில் காங்கிரஸ் வேடப்பாளர்கள் வெற்றி பெற்றும் கூட, தலைவன் வெற்றிபெருவிட்டால் மற்ற 11 உறுப்பினர்களும் செல்வனே இயங்க முடியாது போய்விடும் என்று சொல்லி, தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தை ஆதரித்தே யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

ஜி. ஜி. நிமிர்ந்து பேசும் வரை- ஜி. ஜி யின் உள்ளத்தில் உறுதி உள்ளவரை தான் தமிழ்பேசும் இனம் தலைநிமிர்ந்து வாழமுடியும்

[8-ம் பக்கம் பார்க்க]

# சுன்னுகம் பட்டினசபை

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுவில், செவ்.

சுன்னுகம் பட்டணசபையின் முதலாவது புதுவருட விளையாட்டுப் போட்டி சபையின் புதிய விளையாட்டு மைதானத்தில் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு உடுவில் தொகுதி முன்னுள் நாடாளுமன் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். திருமதி நாகலிங்கம் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினுர். இவ் விழாவை பட்டணசபையின் மராமத்து அத்தியட்சகர் திரு. எம். பூரணச்சந்திரன் நூல்நிலைய உதவியாளர் திரு. என். குமாரவேல் பட்டணசபை உறுப்பினர் திரு. ஆர்.இராசதுரை ஆகியோர் திறமையாக விழாவை நடாத்தினர்.

போட்டிகளில் பரிசில் பெற்றவர்களின்விபரம் வருமாறு:

**கரபந்தாட்டம்**

இளம் தென்றல் மன்றம், உதயசூரியன் சனசமூக நிலையம்.

**10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி:**

கே. சிவபாலன் ஆலடி சனசமூக நிலையம், கே செல்வராசா காந்திரூபன் சனசமூக நிலையம், எஸ். சரவணபவான் ஆலடி சனசமூக நிலையம்.

**2 மைல் மரதன் ஓட்டம்**

கே. மகாலிங்கம் உதயசூரியன் சனசமூக நிலையம், பீ. குணராசா ஸ்ரீ லங்கா சனசமூக நிலையம், எம். பரமநாதன் காந்திரூபன் சனசமூக நிலையம்.

**சங்கீத கதிரை**

ரீ. ஜெயரத்தினம் உதயசூரியன் சனசமூக நிலையம், எஸ். துரைசிங்கம் இளம் தென்றல் மன்றம், எஸ். பரமானந்தன் காந்திரூபன் சனசமூக நிலையம்.

**தடை ஓட்டம்**

க. கமலநாதன் ஸ்ரீ லங்கா சனசமூக நிலையம், வீ. சிவகுமார் உடுவில் ஸ்ரார், வீ. வாசவன் உடுவில் ஸ்ரார்.

**குண்டு எறிதல்**

எஸ். மகேசன் இளம் தென்றல் மன்றம், வீ. ஜெகராஜா உதயசூரியன், எம். வல்லிபுரம் உடுவில் ஸ்ரார்,

**கயிறு இழுத்தல்**

இளம்தென்றல் மன்றம், உதயசூரியன் சனசமூக நிலையம்,

**விநோத உடைப் போட்டி**

டபிள்யூ. ஜெயராஜாவும், வீ. செல்வராசாவும் உதயசூரியன் சனசமூக நிலையம், க. மாணிக்கம் காந்திரூபன் சனசமூக நிலையம், ஸ்ரீ வி. ஆதவன் உடுவில் ஸ்ரார்.

**கிறீஸ் கம்பம் ஏறிதல்**

பரமு மகிழ்ராசா உதயசூரியன் சனசமூக நிலையம்.

## சிவன் சிருர் மன்றம் வெற்றி

சித்தன்கேணி, செவ்

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி, சிவன் சிருர் மன்றத்திற்கும், வட்டுக்கோட்டை வள்ளுவர் மன்றத்திற்குமிடையே நடைபெற்ற கிரிகெட் ஆட்டத்தில் சிவன் சிருர்மன்றம் 2 ஓட்டங்களினுலும் 2 விககட்டுகளினுலும் வெற்றியீட்டியது.

வள்ளுவர் மன்றம் முதலாவது ஆட்டத்தில் 22 ஓட்டங்களையும், இரண்டாம் ஆட்டத்தில் 17 ஓட்டங்களையும் பெற்றது: சிவன் சிருர்மன்றம் முதல்ாவது ஆட்டத்தில் 13 ஓட்டங்களையும் இரண்டம் ஆட்டத்தில் 28 ஓட்டங்களையும் பெற்றது. சிவன்கோவில் மேலை வீதியில் நடைபெற்ற இவ் விளையாட்டிற்கு செல்வன் ரவீந்திரன் மத்தியஸ்தராகக கடமையாற்றினுர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## வடமராட்சிப்பிரிவு விளையாட்டுப் போட்டி

உடுவில், செவ்

வடமராட்சி வடக்கு கிழக்குக் காரியாதிகாரி பிரிவின் விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. காரியாதிகாரி திரு, தம்பிமுத்து இதற்கு தலைமை வகித்தார். மல்யுத்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு மாவட்ட வைத்திய அதிகாரி திரு. கதிர்காமத்தம்பி வெற்றிக் கிண்ணம் பரிசளித்தார்.

செல்வி இந்திராவின் 'சோக்கஸ்' காட்சி, மற்றும் உத்தியோக மாப்பிள்ளை, 'ஸ்ரீவள்ளி' ஆகிய நாடகங்களும் விழாவில் இடம் பெற்றன.

## வெற்றிக்கிண்ணம் சொந்தமாகியது

உடுவில், செவ்.

சுன்னுகம் இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினருக்கு டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக் கிண்ணம் சொந்தமாக்கப்பட்டது.

சுன்னுகம் பொலிஸ் பகுதியினர் வருடாவருடம் நடாத்தும் புத்தாண்டுக் கொண்டாட்ட விளையாட்டுப் போட்டிகளில் கரபந்தாட்டப் போட்டியில் ஈடுபட்ட சுன்னுகம் இளந்தென்றல் மன்ற விளையாட்டுகழகம் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக முதலிடம் பெற்று சாம்பியனுகி இம்முறை வெற்றிக் கிண்ணத்தைத் தமக்காக்கிக் கொண்டது.

புத்தாண்டு தினத்தன்று டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக் கிண்ணம் இவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெ. வியட்னுமிலிருந்து மேலும்

# ஒன்றரை லட்சம் அமெரிக்க துருப்புகள் விலக்கப்படுவர்

## அதிபர் நிக்ஸன் அறிவிப்பு

நியுயோர்ச், ஏப்பரல் 21

**வியட்னுமிலிருந்து மேலும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்கப் படைகளைத் திருப்பியழைக்கப் போவதாக அதிபர் நிக்ஸன் இன்று அறிவித்தார்.**

வியட்னும் பிரச்னை சம்பந்தமாக அதிபர் நிக்ஸன் இன்று காலை டெலிவிஷனில் கொள்கை அறிக்கையொன்றை விடுத்தார். இந்த அறிக்கையை கடந்த வாரமே அவர் விடுவதாகவிருந்தார் ஆனல் அப்பலோ-13 சந்திரப் பயணத்தில் ஏற்பட்ட சங்கடங்களையொட்டி அதிபர் நிக்ஸன் இதனை இன்றுவரைக்கும் ஒத்திப்போட்டிருந்தார்.

இன்று காலை டெலிவிஷனில் அதிர்ப நிக்ஸன் வியட்னும் பற்றிய கொள்கையை பிரகடனப்படுத்தினர்.

அடுத்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்குள் வியட்னமிலுள்ள அமெரிக்க தரைப் படையினரில் மேலும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரை விலக்கிக்கொள்ளப் போவதாக அதிபர் அறிவித்தார்.

அமெரிக்கப் போர்த் தளபதிகளின் சிபார்சின் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறிய அவர் தென் வியட்னுமியர் போர் பொறுப்புகளைத் தாமே நிர்வகிக்கும் தகுதியைப் பெற்று வருவதில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பாரிஸில் இடம்பெற்று வரும் வியட்னும் அமைதிப் பேச்சுகள் பற்றிக் குறிப்பிட்ட அதிபர் நிக்ஸன் கம்யூனிஷ்டுகள் தங்கள் தரப்பில் இனி நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வியட்னும் அமைதிக்கான சூழ்நிலை உருவாகிவருகின்றது. அமெரிக்கப் படைக் குறைப்பை கம்யூனிஸ்ட்டுகள் பயன்படுத்தி சதி நடவடிக்கைகளில் இறங்குவார்களானல் அமெரிக்கா தனது நிலைமையை மறுபரிசீலனை செய்யவேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்ததாகத் தெரிகின்றது

### லேயார்ட் கருத்து

சண்டை ஆயுதங்களைக் குறைப்பது சம்பந்தமாக அமெரிக்கா விஷேச அறிவித்தல் எதையும் விடுக்காமல் இருப்பதற்கு வியன்னுவில் நடைபெற்றுவரும் மாநாட்டில் ஏதாவது உருப்படியான முடிவு ஏற்படவேண்டுமென்பதே காரணமென்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லேயார்ட் கூறியிருக்கிருர்.

## வீழ்ந்த கிராமத்தை மீட்கும் முயற்சி தோல்வி

நாம்பென், ஏப். 21

கம்யூனிஸ்ட்டுகளின் வசம் வீழ்ச்சியுற்றுள்ள கிராமமொன்றைத் திருப்பிச்கைப் பற்றுவதற்காக கம்போடிய படையினர் நடத்திய மூர்க்கமான தாக்குதல் ஒன்றை கம்யூனிஸ்ட்டுகள் [illegible] டிய படைகளினல் படுகொலைசெய்யப்பட்டிருப்பது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக தென் வியட்னும் தூதுகோஷ்டியொன்று கம்போடிய தலைநகருக்கு வரவிருகின்றது.

வியட்னும் அட்சிமன்றத் [illegible]

## ரொடீஷியா பிரிட்டிஷ் தொடர்பு

லண்டன், ஏப்ரல் 21

பிரிட்டிஷ்எதிர்ககட்சியாக விளங்கும் கன்சர்வேடிவ் கட்சியினர் ரொடீசிய அரசாங்கத்துடன் உத்தியோக முறையில் தொடர்புவைத்துள்ளதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் குற்றம்சாட்டியிருக்கிருர்.

கன்சர்வேடிவ் கட்சியினர் பகிரங்கமாகவே ரொடீசியா சென்று வருவதாகவும் இரகசியத் தொடர்புகளிருந்தால் அதை நிரூபித்து வழக்குத்தொடரும்படியும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் திரு. ஹீல்த் பிரிட்டிஷ் பிரதமர் வில்சனுக்கு சவால் விட்டிருக்கிருர்.

## கியுபாவில் கூலிப்படை?

கியூபா, ஏப்ரல் 21

கியூபாவில் அத்துமீறிப் புகுந்துள்ள நவீன ஆயுதங்கள் தாங்கிய கூலிப்படையொன்றை ஆயுதந்தாங்கிய கியூபா படையினர் தேடி வருகின்றனர். என்று அறிவிக்கப்பட்டது அமெரிக்க அரசின் ஆதரவுடன் கியூபாவுக்குள் பிரவேசித்துள்ள இவர்கள் மீது கியூபா படைகள் [illegible]

## 'நல்ல தொண்டர்களையே ஆட்சிமன்றம் அனுப்புவோம்'

யாழ்ப்பாணம், புதன்

''பொதுவாக எல்லோரும் சுயநலம் கருதுகின்றவர்களே. பஸ்தரிப்பிடத்தில் பஸ் வந்ததும் அதனை எதிர்பார்த்து நின்றவர்கள் ஏனையோரைப் பற்றி அக்கறைப் படுத்தாது தன்னலமே காரணமாக மற்றவர்களை தள்ளிக் கொண்டு பஸ்ஸில் ஏறுவதுபோல் மற்றவர்களை மடக்கி பாராளுமன்றம் என்ற பஸ்ஸில் ஏறவே அபேட்சகர்கள் விரும்புவார்கள்.''

இவ்வாறு பரந்தன் கமறிகுடா கமத்தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. எம். அருணுசலதேவர் பரந்தன் ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் முன்றறில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் பேசும்போது மேலும்குறிப்பிட்டவை வருமாறு:-

பொதுமக்கள் கண்ணியமான வாக்குப் பொக்கிஷத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. கடைசிவரை அவர்கள் நமது சமுகத்தை ஒழிக்கமுற்பட்டால் நாம் ஒன்றுபட்டு நின்று நமது உரிமைகளைப் பெற முயலவேணடும்.

வகுப்புவாதம் தலையெடுக்காமல் பெரும்பான்மையோரிடம் சரிநிகர் சமானமாக ஆட்சிமன்றத்தில் பேசுவதற்கு கண்ணியம் மிக்க பிரதிநிதிகளை அனுப்பவேண்டும்.

நல்ல தொண்டர்களை நாம் தெரிவு செய்வோம். இதனல் நாமும் நாடும் நன்மைபெற இயலும்.

ஆசிரியர் எம். சுப்பிரமணியம் உட்படப் பலர் பேசினர்.

## நாட்டின் அபிவிருத்திக்கு ஒற்றுமை அவசியம்

— பிரதமர்

இரத்மலானை, செவ்வாய்

'வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டு போவதால் நாட்டில் துரிதமான அபிவிருத்தி அத்தியாவசியமானதொன்ருகும். இத்தகைய துரித அபிவிருத்திக்கு நாட்டில் சுமுகமான நிலை நிலவவேண்டும் அதாவது நாட்டில் வாழும் பல்வேறு இன மக்களிடையே ஒற்றுமையும் அதனல் நாட்டில் அமைதியும் நிலவவேண்டும். இத்தகைய தொரு சூழ்நிலையில் தான் நல்ல அபிவிருத்தியைக் காணமுடியும்- உண்டு பண்ணவும் முடி[illegible] முன்னர் நாட்டின் [illegible]பொருளாதார அபிவிருத்தி குழப்பமான அரசியல் நிலையால் பாதிக்கப்பட்டு [illegible] நிலையில் இருந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்டு [illegible] தொழிலுக்குத் தேவையான பெருந்தொகையான நூலை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. இந்த நிலைமாற வேண்டும். இதற்காக நாங்கள் ஒரு திட்டம் தயாரிக்கிறேம் எனக் கூறினர்.

ராஜாங்க அமைச்சர் உட்படப் பலர்உரையாற்றினர்

## அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. [illegible] கடந்த 25 வருட காலம் அதிபராகக் கடமையாற்றி [illegible]

ஐக்கியதேசியக்கட்சி

## வறியவர்களை கைவிட்டுவிட்டது

தரணியாகொலை, செவ்

'வறியமக்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களே சோஷலிச அரசாங்கத்தை உருவாக்குவார்கள். கறுவாக்காட்டில் டாம்பீகமாக வாழ்க்கை நடாத்தும் முதாலாளியார்கள் ஒருபொழுதும் சோஷலிச அரசாங்கத்தை உருவாக்க மாட்டார்கள்'.

படுவத்தையில் நடைபெற்ற கூட்டணி பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கதகிளளை, கல்கிசை, மாநகரசபை உதவிமேயர் திரு. சந்திராகுணசேகரா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஐக்கிய தேசியக்கட்சி ஏழைகளுக்கு ஒருவிதமான நன்மையும் செய்யவில்லை. கூட்டணியினர்பக்கம் மக்கள் சாருவார்களானல் அவர்களது எதிர்காலம் ஒளிமயமாகும் இந்த அரசாங்கம் சிறுபான்மையினர் நலத்தையும் கவனிக்கவில்லை. கூட்டணியினர் பதவிக்கு வந்தால் சிறுபான்மையினர் நலம் நிச்சயமாகப் பேணப்படும் எனக் கூறினர்,

திருவாளர்கள் வாசுதேவ நாணயக்கார. ஏச் டி சந்திரசிறி, நந்தாலெவலை வணசுமணவன் தேரோ உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

இந்திய பிரஜாவுரிமை

## 69,145 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது

கோட்டை, செவ்வாய்

இவ்வருடம் மார்ச் 31-ம் திகதிவரை இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 69,145 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப் பட்டுள்ளது

இதுவரை 30,348 இந்திய வம்சா வளியினர் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று நாடு திரும்பியுள்ளனர்.

## இன்று திறப்புவிழா

அராலி, செவ்வாய்

அரசாங்க கிராமிய மின் சக்தி விநியோகத் திட்டத்தின்கீழ் அராலி வடக்கில் புதிதாக அமைக்கப்பட்ட உப மின்நிலையம் இன்று [illegible]றந்து வைக்கப்படவுள்ளது பிற்பகல் 5 30 மணிக்கு திரு ஏ ஜே சோமசுந்தரம் சம்பிரதாய முறைப்படி இதனைத் திறந்து[illegible]வப்பார்

## 'ஆண்டவன்சந்நிதானத்தில் அனைவரும் சமம்'

நல்லூர், செவ்

''சைவசமயத்திலே சாதிகள் உண்டென்று எங்கேயும் சொல்லவில்லை. சைவமக்கள் எல்லோரும் ஆண்டவன் சந்நிதானத்திலே சமம். பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்குமுன்பே 'ஒன்றே குலம்' என்று திருமூலரே சொல்லியிருக்கிருர். ஆலயம் தொழுவது சாலவும் நன்றென்பதற்கிணங்க சைவமக்களாகிய எல்லோரும் ஆண்டவன் சந்நிதானத்திலே சரிசமமாக வேற்றுமையின்றி, ஆண்டவனைத் தொழவேண்டும். அப்படியானல்தான் ஆண்டவனின் அருளைப் பெறலாம்''.

மேற்கண்டவாறு புத்தூர் புத்தகலட்டியில் சிறுபான்மைத் தமிழரினல் அமைக்கப்பெற்ற அம்பாள் ஆலயத்தில் உரையாற்றிய கோப்பாய்தொகுதி முன்னுள் உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளைகூறினர்.

மேலும் அவர் கூறுகையில், தீண்டாமை ஒழிப்பை பலாத்காரத்தினல் ஒழிக்க முடியாது. பலாத்காரத்தைப் பிரயோகித்தால் எதிர்ப்புக்கள் அதிகரிக்குமேயன்றி, ஒருபோதும் சமாதானம் நிலவமாட்டாது. ஆகவே சட்டத்தின்படி, ஆத்மீகவழியில், அஹிம்சை வழியில் தீண்டாமையை ஒழித்து தமிழ் மக்களாகிய நாம் அனைவருடனும் ஒற்றுமையாக இருந்தால்தான் தமிழினத்திற்கு தேவையான உரிமைகளையும் சலுகைகளையும் பெறலாம்'' என்ருர்.

கூட்டத்திற்கு திரு. வ. கனகு தலைமைதாங்கினர். செல்வன் க. இராஜேஸ்வரன் நன்றியுரை கூறினர்.

## ''வாக்குரிமையைபணத்தால் வாங்கிவிட முடியாது'

அல்லைப்பிட்டி, செவ்வாய்

''இன்று தமிழர் மத்தியில் பல கட்சிகள் போட்டியிடுகின்றன. எல்லாக் கட்சிகளும்சேர்ந்து தமிழர் மத்தியிலே மிகச் செல்வாக்கான இடத்தைப் பிடித்துக் கொண்ட தமிழரசுக்கட்சியை எப்படியும் முறியடிக்க முயற்சிகள் பல செய்துவருகின்றன'' என ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் மண்கும்பானில் நடைபெற்ற கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். திரு செ திரு நாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த நாட்டில் தமிழ்மக்கள் தன்மானத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழவேண்டுமாயின் அதற்கு தமிழரசுக்கட்சி வலியுறுத்தி வருகின்ற சமஷ்டி அரசியலே சிறந்த வழியாகும் 1970-ம் ஆண்டுத்தேர்தல் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் ஒரு திருப்பமாக அமையும்

சில சுயேச்சைவாதிகள் பணத்தால் மக்கள் வாக்குரிமைகளை விலைக்கு வாங்கி விடலாமென நினைக்கின்றனர் மக்கள் இவர்களைச் சரியாகப் புரிந்துகொண்டு நல்ல பாடம் கற்பிக்கப் போகின்ருர்கள் கடந்த தேர்தலில் பணத்தால் வாக்குகளை வாங்கலாம் என்று முன் வந்தவர்களுக்கு மக்கள் கற்பித்த பாடத்தை இவர்கள் உணரவேண்டும் தேர்தல் நெருங்க நெருங்க இவர்கள் பரப்பி வருகின்ற பொய்ப்பிரசாரங்கள் வளர்ந்துகொண்டே செல்கின்றன ஆனல் இவை தேர்தல் வரையும் தான் தேர்தல் முடிந்ததும் இவர்களுடைய பெயரையே சிலவேளை மக்கள் மறந்து விடுவார்கள்''

இக்கூட்டத்தில் அல்லைப்பிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு செ தவவிநாயகம், என். கே தருமலிங்கம், நா சோமசுந்தரஐயர், வேறு பலரும் பேசினர்.

## மக்கள் வெள்ளத்தை . . .

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று சொன்ன 'வன்னி தந்த கன்னித்தமிழ் பேசும் காவலன்' வவுனியாச் சிவசிதம்பரம், தான் இருமுறை சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றபோது, எத்தனையோ கட்சிகள் அவரைத் தத்தம் கட்சிகளில் சேர அழைத்த [illegible] திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேச ஆரம்பித்தார்.

'நான் இன்றைக்கு யாரையும் தூஷிக்க வரவில்லை. தூஷிக்க ஆரம்பித்தால் மோசமாகத் தூஷிக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியுந்தானே என்ற பூர்வ பீடிலகயுடன் ஆரம்பித்த ஜி ஜி 'எம்மினத்தை [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாம்பென், ஏப். 21

கம்யூனிஸ்ட்டுகளின் வசம் வீழ்ச்சியுற்றுள்ள கிராமமொன்றைத் திருப்பிச்கைப் பற்றுவதற்காக கம்போடிய படையினர் நடத்திய மூர்க்கமான தாக்குதல் ஒன்றை கம்யூனிஸ்ட்டுகள் முறியடித்துள்ளனர்.

வியட்காங்கியர் நிலைகள் மீது கம்போடிய படைகள் ரொக்கட்டுகளாலும் விமானங்களாலும் தாக்கினர்கள். வியட்காங்கியரும் பலமாகத் திருப்பித்தாக்கினர்கள்.

கம்போடிய படைகளின் தாக்குதல் காரணமாக வியட்னும் பொதுமக்கள் பலர் பலியாகியிருப்பது குறித்து கம்போடிய ராஜாங்கத் தலைவர் ஜெனரல் லோன் நொல் கவலை தெரிவித்திருக்கிருர்.

வியட்னுமியர்கள் கம்போடிய [illegible] கொலைசெய்யப்பட்டிருப்பது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக தென் வியட்னும் தூதுகோஷ்டியொன்று கம்போடிய தலைநகருக்கு வரவிருக்கின்றது.

வியட்னும் ஆட்சிமன்றத்திலும் கம்போடிய படைகளின் வெறிச் செயலைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

நூற்றுக்கணக்கான தென் வியட்னும் மக்கள் கம்போடிய படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்படும் என்றும் கம்போடிய சிப்பாய்கள் வேண்டுமென்றே இதைச் செய்திருந்தால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் ஐ. நா. வில் கம்போடிய பிரதிநிதி அறிவித்திருக்கிருர்.

[illegible] கியூபா படையினர் தேடி வருகின்றனர். என்று அறிவிக்கப்பட்டது அமெரிக்க அரசின் ஆதரவுடன் கியூபாவுக்குள் பிரவேசித்துள்ள இவர்கள் மீது கியூபா படைகள் கடும்நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக பிடல் காஸ்ட்ரோ அறிவித்திருக்கிருர். இருதரப்பினருக்குமிடையில் கடுமையான சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

......

ஜோர்டான் மந்திரி சபை

## மாற்றி அமைக்கப்பட்டது

அம்மான், ஏப்ரல் 21

ஜோர்டான் மந்திரிசபை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மாற்றி அமைக்கப்பட்ட மந்திரிசபையில், விலகியவர்களுக்குப்பதிலாக புதிய 5 மந்திரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

— —

யூகோஸ்லாவியாவில்

## பெறுமதியான கனிஜம் கண்டுபிடிப்பு

பெல்கிரேட், ஏப். 21

யூகோஸ்லாவியாவில் 'வொலஸ்டனேட்' என்றகனிஜம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. யூகோஸ்லாவியாவின் தென்கிழக்கிலுள்ளள கோப்பாவோனிக் மலைப்பிரதேசத்தில்காணப்படும் இந்த கனிஜம் பீங்கான் போன்ற பாத்திரங்கள் செய்வதற்கு மிகவும் உபயோகமாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது.

இந்தக் கனிஜப் பொருள் உலகத்தில் இதுவரை ஐந்து இடங்களில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவைப் பொறுத்தவரை ஃபின்லாந்தில் மாத்திரமே இது கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றது. ஆனுல் ஐரோப்பாவின் தேவைகளை இது பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாய் இல்லை. இதனுல் ஐரோப்பிய நாடுகள் தம் தேவைகளுக்கு அமெரிக்காவையே எதிர்பார்த்திருக்கின்றன. இந்த நிலைமையில்யூகோஸ்லாவியாவில் கிடைக்கும் இந்தக் கனிஜம் அமெரிக்காவில் கிடைப்பதற்கும் எந்த விதத்திலும் தரத்தில் குறைந்ததாய் இல்லை என்பதால் ஐரோப்பியரின் தேவைகளை பெரிதும் பூர்த்திசெய்யக் கூடியதாய் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

பண்ணவும் முடி[illegible] னர் நாட்டின் [illegible]பொருளாதார அபிவிருத்தி குழப்பமான அரசியல் நிலையால் பாதிக்கப்பட்டு [illegible] தங்கிய நிலையில் இருந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஒற்றுமை காரணமாகப் பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையடையக் கூடியதாக விருக்கிறது'.

ஞாயிற்றுக் கிழமையன்று இரத்மலானையில் ஆசிய பருத்தி ஆலை லிமிட்டட்டைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் பிரதமர் டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடருகையில் 'அபிவிருத்தி என நாம் கூறும் பொழுது திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். அரசாங்க கைத்தொழில் துறைகளுக்கு மட்டுமன்றித் தனியார் துறைகளுக்கும் ஊக்கமளிக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு பிலிப்குணவர்த்தன உரையாற்றுகையில் மக்கள உணவை மாத்திரம் பெற்றுவிட்டால் போதாது அவர்களுக்கு உடையும் அவசியம். இலங்கை தற்போது துணிகளை இறக்குமதி செய்யும் நிலையில் இருப்பதோடு மட்டுமல்லாமல் நெசவுத்

## கலைமன்ற ஆண்டு விழா

உடுப்பிட்டி, செவ்.

'ஊருக்கொரு மன்றம் அமைத்து ஊர்ப்பிள்ளைகளின் கல்வி, பொருளாதார கலாச்சார முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். எமது குழந்தைகள் சிறந்த அறிவும் பண்பாடும் மிக்கவர்களாகத் திகழவேண்டும். கைத்தறி, நெசவு முதலிய சிறு கைத்தொழில்களில் ஆர்வம் காட்டவேண்டும் என புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்ற 8-வது ஆண்டு விழாவிற்குத் தலைமைவகித்த திரு. மு. கணேசன் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இராமநாதன் கனிஷ்ட பல்கலைக்கழக அதிபர் ரு. எஸ். கந்தசாமி பசுமையில், இப்பகுதி மக்களது ஒற்றுமையும் கலை, இக்கியத்துறையிலுள்ள ஈடுபாடும் என்றும் இவர்களைச் சிறந்த மனிதர்களாக வாழவைக்கும்' என்ருர்.

இரவு கலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

யாழ்ப்பாணம், புதன்

காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. ஆ. தியாகராசா கடந்த 25 வருட காலம் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறியதையிட்டு சேவை நலம் பாராட்டுவிழா காரைநகர் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. தியாகராசாவின் 25 வருட கால அதிபர் சேவையைப் பாராட்டினுர். திரு. தியாகராசா வாழ்நாள் முழுவதையும் கல்லூரி ஆக்கப் பணிகளுக்கு அர்ப்பணித்துள்ளாரென்றும் காரைநகர் மக்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைய அவரே காரணமென்றும் குறிப்பிட்டார்.

அடுத்து வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவபாதம், பேசுகையில், திரு. தியாகராஜா மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்டவர் என்றும் தெரிவித்தார்.

திரு. என். ஆர் என் தேவதாசன் பழைய மாணவர்கள் சார்பில் திரு தியாகராசாவுக்கு பொன்னுடை போர்த்தி கௌரவித்தார் பண்டாரவளை நகரசபைத் தலைவர் திரு க வே துரைராசா, திரு தியாகராசாவுக்கு காரை மக்கள் சார்பில் பொற்கிழி வழங்கினுர் திருவாளர்கள் கே கே விஸ்வலிங்கம், எம் ஏ கந்தையா, சின்னையா, பிஜோனு ஆகியோரும் பேசினர்

[illegible] வுள்ளது பிற்பகல் 5 30 மணிக்கு திரு ஏ ஜே சோமசுந்தரம் சம்பிரதாய முறைப்படி இதனைத் திறந்து [illegible]வைப்பார்

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 22—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 புல்லாங்குழல், 7-45 விளையாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## "'வேலையற்ற வாலிபர்க்கு வேலைகொடுப்பதே என்நோக்கம்"

அராலி, செவ்வாய்

"கடந்த 25 ஆண்டுகளாகச் சமூக சேவை செய்து வரும் நான் இத் தொகுதியில் சில கைத்தொழில் நிலையங்களை உருவாக்கி இப் பகுதியிலுள்ள எல்லாவாலிபர்க்கும் வேலை கொடுப்பதையே எனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளேன்'.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிற்கும் திரு ஆ தியாகராசா இங்கு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றில் குறிப்பட்டார்.

இப் பகுதியிலுள்ள எல்லாக் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களும் குழுமியிருந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், 'நான் ஒரு காலத்தில் இடது சாரி அனுதாபியாக இருந்தது உண்மைதான். எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா என்றைக்கு ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்காக நாட்டின் அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தாரோ அப்பொழுதே அக்கட்சியிலிருந்து விலகி தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி, பொன்னம்பலத்தின் தலைமையில் நம்பிக்கை கொண்டு அவரது கட்சியில் சேர்ந்து விட்டேன்' என்ருர்.

## வன்முறைகளை தடுக்க இந்திரா காந்தி உறுதி

சென்னை, ஏப். 21

மதம், ஜாதி, நாடு ஆகியவற்றின் பேரில் வன்முறைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அரசாங்கமும் பொதுமக்களும் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும். பெரும்பாலானவர்கள் சும்மா இருந்து விடுவதினுல் சிலர் வன்முறைச் செயலில் ஈடுபடுகின்றனர். நாக்ஸல்பாரி போன்ற வன்முறையில் ஈடுபடுவோரை அரசாங்கம் மட்டும் தடுத்துவிடமுடியாது பொதுமக்களும் சேர்ந்து பாடுபடவேண்டும் என்று பாரதப் பிரதமர் இந்திராகாந்தி சென்னையில் கூறினுர்.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தி. மு. க. கொள்கைபற்றி குறிப்பிடுகையில் "நாட்டின் நிலைத்தல் தன்மையைக்காக்கவும், எல்லா மாநிலங்களைகளையும் காக்கவேண்டியிருப்பதால், இது செயல்படுத்துவது முடியாத காரியம் என்று கூறினுர்.

### ஜகஜீவன்ராம் பேச்சு

நிலச்சீர்திருத்தம், உழுபவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குதல் போன்றவற்றைச் செய்யாமல் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பசுமைப் புரட்சியைநீடித்திருக்கச் செய்யமுடியாது என்று மன்னர்குடியில் நடந்த தமிழ்நாடு புதிய காங்கிரஸின் இருதின அரசியல் மகாநாட்டைத் துவக்கி வைத்து, புதிய காங்கிரஸ் தலைவர் திரு. ஜகஜீவன்ராம் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகை[illegible] யில் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். இவை மிகவும் அபாயமானவை. கிஸான்களின் சலியாத உழைப்பினுல் பசுமைப் புரட்சி நாட்டில் தோன்றியுள்ளது. சில முதலாளித்துவ பத்திரிகைகள் செய்திகளைத் திரித்து வெளியிட்டு எம்மைப் பற்றித் தவருன கருத்தை மக்களிடத்தே பரப்புகின்றனர் என்ருர்.

சேலம், ஹொஸ்பெட், விசாகை ஆகிய இடங்களில் உருக்காலைக்கு அனுமதி வழங்கிப் பிரதமர் இந்திரா காந்தி லோகசபையில் அறிவித்ததை இம்மாநாடு பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றியது. இத்தீர்மானம் இத்திட்டத்திற்குக் காரணமாய் இருந்த பழைய புதிய மந்திரிகளைப் பாராட்டியுள்ளது.

— —

## புதிய உறுப்பினர்கள்

சித்தன்கேணி, செவ்.

வட்டு கிழக்கு சித்தன் கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் அதன் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: இ. மு. அருணசலம், உபதலைவர்: ச. நிற்சிங்கம், காரியதரிசி: என். எஸ். கந்தசாமி. ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

[illegible] சிதம்பரம், தான் இருமுறை சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றபோது, எத்தனையோ கட்சிகள் அவரைத் தத்தம் கட்சிகளில் சேர அழைத்தபோதும், அவற்றில் எல்லாம் சேராமல், தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தது. ஜி ஜி யின் தலைமை தான் சிறந்த தலைமை எனத் தான் பரிபூரணமாக நம்பியதால்தான் என்று கூறினுர்

திரு. ரி. சிவசிதம்பரத்தின் பேச்சில் பெரும்பகுதி அந்தசினில் என்றதமிழரசுக் கட்சிப் பேச்சாளரொருவரைத்தாக்கவும் வவுனியாக் குடியிருப்புப் பகுதியில் மாதா சிலை சிதைக்கப்பட்டதற்கான பின்னணிக் கதையைக் கூறுவதிலுமே செலவாகியது கத்தோலிக்க மக்களிடையே தனக்குஆதரவில்லை என்று கூறித்திரிபவர்களை வவுனியாவிலே வந்து கத்தோலிக்க மககள் மத்தியில் சொல்லிப்பாருங்கள், பத்திரமாகத் திரும்புவீர்களா? பார்ப்போம் என்று சவால்விட்டார்?

### உடுப்பிட்டி சிவசிதம்பரம்

உடுப்பிட்டிச் சிவசிதம்பரம் பேசுகையில், 14 மாலுமிகள், தமிழகம் என்னும் கப்பலைச் செலுத்துவதாகத் தமிழரசுக் கட்சியினர் வர்ணிப்பதுண்டு, தமிழ் மக்கள் 1970-ம் ஆண்டில் அவர்களை நட்டாற்றில் தள்ளத் தீர்மானித்துவிட்டதை திரண்டு வந்த மக்கள் கூட்டம் காட்டுவதாகக் கூறினுர்.

ஜி. ஜி. இன்னும் எத்தனை ஆண்டுகள் உயிருடன் இருப்பார் என்பது அந்த நல்லூர்க் கந்தனுக்குத்தான் தெரியும் என்று சொன்ன சிவசிதம்பரம், அரசியல்தீர்க்கதரிசனத்துக்கு தென்னிந்தியாவில் ஒரு ராஜாஜி என்ருல் இலங்கையில் ஒரு ஜி. ஜி. தான் என்று கூறினுர். (பலத்த ஆரவாரமும், கைதட்டலும்)

"நாங்கள் மூவர், இல்லை ஒரு பொன்னம்பலத்திலே இரு சிவசிதம்பரங்கள். அமைச்சர் திருச்செல்வமும் அவர்தம் சகாக்களும் சாதித்திருப்பதைவிட அதிகமாகச் சாதித்திருக்கிருேம். திரு. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெற்ருல் அதனுல் அவருக்கோ. கட்சிக்கோ அல்ல லாபம்; அவருக்குப் பின்னும் வருகிற சந்ததியினர் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானுல் அவரது வெற்றி அவசியம்' என்று கூறிமுடித்தார்.

இவரைத் தொடர்ந்து [illegible] மோசமாகத் தூஷிக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியுந்தானே என்ற பூர்வ பீடிலகையுடன் ஆரம்பித்த ஜி ஜி 'எம்மினத்தை சிங்களமக்கள்பெரிதாக மதித்தகாலம்ஒன்றிருந்தது அந்நிலைமையை மீண்டும் உருவாக்கவே நான் மறுபடியும் முயற்சிசெய்கிறேன்' என்று சத்தியவாக்காக சொன்னுர்

இப்போது நாம் செய்கின்ற முடிவுகளின் பலாபலன்களை இப்போது நாம் உணரமுடியாது. சரித்திர மூலமாகத்தான் அறியலாம் நமக்கு வேறெந்த நாட்டிலிருந்தும் உதவி கிடைக்காது என்று அறிந்தபடியால் தான், நான் சிங்களவர்களுடன் ஒத்துழைத்துத்தான். இச்சின்னச்சிறு நாட்டில் வாழமுடியும் என்ற முடிவுக்கு வந்தேன்

'என் சாதிக்கு, என் இனத்திற்கு தனி அரசு வரும் என்ருல் நான் எதிர்ப்பேனு? ஆனுல் யார் தனியரசு பெறுவது? யாரிடமிருந்து பெறுவது? எவருடைய உதவியோடு பெறுவது?

சமஷ்டிக் கட்சியினர் ஆனையிறவுக்கப்பால் போய் நாங்கள் ஐக்கிய இலங்கைக்குத்தான் என்று சொல்லிவிட்டு இங்கு வந்து தமிழரசு என்று மாய்மாலம் போடுகிருர்கள்

சமஷ்டி அமைப்பு இலங்கைக்குக் கூடாது; தமிழர்க்கு மிகமிகக் கூடாது.

நான் தீர்க்கதரிசியல்ல; ஆனுல் இதுவரை நான் சொன்னதெல்லாம் சரிவந்திருக்கிறது. 1949 ஆண்டே சொன்னேன், சமஷ்டி ஒருபோதும் கிடைக்காது என்று இன்றுவரை கிடைத்திருக்கிறதா?.

தமிழர்கள்வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழாமல் தென் மாகாணத்தில் வாழ்ந்திருந்தால் சமஷ்டி அரசியலமைப்பைக் கொடுத்திருப்பார்கள், ஆனுல் தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழ்வதால், தென்னிந்தியாவுடன் சேர்ந்து விடுவார்களோ என்ற பயத்தால் தான் அவர்கள் கொடுக்கப் பயப்படுகிருர்கள்.

தமிழ்க்காங்கிரஸுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள் என்றுகூட கேட்கவில்லை; இரண்டரை ஆண்டுகள் சந்தர்ப்பம் தாருங்கள். உங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொடுககாவிட்டால் நாங்கள் இராஜினுமாச் செய்துவிடுகிருேம்' இவ்வாறு கூறினுர் ஜி ஜி.

வி குமாரசாமி, சிவனேசன் உட்பட இன்னும் பலர் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
பெருமை எப்பொழுதும் பணிந்துபோகும்.
ஆனல் சிறுமையோ எப்பொழுதும் தன்னைத்தானே
வியந்துசொல்லும், — திருவள்ளுவர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம்
3-ந் திகதி (22-4-70)

## கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்காசமசமாஜக் கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளின் கூட்டணியும் தங்கள் தேர்தல்விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளன, மொத்தம் இருபத்தைந்து அம்சங்கள் இந்த விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ளன, திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையில் கூட்டணியினர் அமைக்க உத்தேசித்துள்ள மக்கள் அரசாங்கத்துக்கு உதவியாக பிரதேச அடிப்படையில் மக்கள் குழுக்கள் அமைக்கப்படுமென்பதும் இன, மத. சாதி அல்லது மொழி அடிப்படையில் வன்முறையைத் தூண்டிவிடமுயலுவோருக்குக் கடும் தண்டனை விதிப்பது, வங்கிமுறைகளைத் தேசியமயமாக்குவது மற்றும் சில முக்கிய அம்சங்களாகும். உண்மையான தேசியஐக்கியத்தை நிலைநாட்டுவது சகல மக்களும் சுதந்திரமாக வாழவும் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்து இலங்கையை ஒரு குடியரசு நாடாக்க புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதும் விஞ்ஞாபனத்தில் கூட்டணியினர் அளித்துள்ள உறுதிமொழியாகும்! மீண்டும் வாரத்துக்கு இரண்டுபடி அரிசி வழங்கப்படுமென்று கூறும் கூட்டணித் தேர்தல் விஞ்ஞாபனம் வாழ்க்கைச் செலவு குறைக்கப்படுமென்றும் வேலையில்லாத்திண்டாட்டம் நீக்கப்படுமென்றும் கூறுகிறது. உத்தியோக மொழிச்சட்டமும் தமிழ் மொழி உபயோகச்சட்டமும் சரியாக அமுல்நடத்தப்படுமென்றும் உத்தியோக நியமனத்தில் பாகுபாடு காட்டப்படமாட்டாதென்றும் கூட்டணியினர் உறுதியளித்துள்ளனர்.

தொழிலாளர், நடுத்தர வர்க்கத்தினர், அரசாங்க உத்தியோகத்தர், முப்படையினர், பொலிஸ்படையினர் ஆகியோரின் ஆதரவையும் சிறுபான்மையினரின் ஒத்துழைப்பையும் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கூட்டணியினர் தயாரித்திருக்கின்றனர்

நல்ல பல அம்சங்களைக் கொண்டிருக்கும் இந்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருப்பவற்றை கூட்டணியினர் ஆட்சிக்கு வந்தால் முற்றுமுழுதாக அமுல்நடத்தினல் நாடு சுபீட்சப்பாதையில் செல்லமுடியுமென்பது உண்மையே.

ஆனல் அவர்கள் செயல்படுத்துவார்களா? ஆட்சிக்கு வந்ததும் தேர்தல்விஞ்ஞாபனத்தை மறந்துவிடுவது தானே இங்குள்ள வழக்கம்.

கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில அம்சங்களை பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராய்வோம்.

## பத்திரிகைச் சுதந்திரம்

ஜனநாயக அரசியல் ஆட்சி நிலவும் நாடுகளில் அரசியல் கருத்து வேற்றுமையுள்ள பல கட்சிகள் இயங்குவதற்கு உரிமை இருக்கிறது. இக்கட்சிகள் தத்தம் கருத்துகளை பகிரங்கமாக பொது மக்களுக்கு எடுத்துக் காட்டக்கூடிய அபிப்பிராய சுதந்திரமும் இருக்கிறது, இச்சுதந்திரம் கட்சிகளுக்கு மட்டுமல்லாமல் கட்சி சார்பில்லாமல் நடுவு நிலைமையாய் இருப்பவர் மலே, வாசகப் பெருமக்கள் அறிவார்கள்.

தேர்தல் சமயங்களில் கட்சி சார்பற்ற முறையில் நடுநின்று, செய்திகளையும் கருத்துகளையும் வர்ணக் கலப்பில்லாமல் நிஷ்களங்கமாகப் பிரசுரித்து. வாக்காளரின் அபிப்பிராயத்தை உருவாக்க உதவி புரிவதே பத்திரிகைகளின் பணியாயிருக்கவேண்டும். அதுவே ஜனநாயகப் பண்பு.

இப்பணியை இன்று

# ஆட்சி மன்றத்தில் சாதித்தது என்ன?(6)

# பயனுள்ள திட்டங்கள் பல உடுவாக உழைத்தேன்

ஆட்சி மன்றத்தில் சாதித்தது என்ன? என்ற இத்தொடரில் ஆறுவது பேட்டிக் கட்டுரை இது. இதுவரை, ஊர்காவற்றுறை நவரத்தினம், உடுவில் தர்மலிங்கம், கோப்பாய் கதிரவேற்பிள்ளை, நல்லூர் நாகநாதன், உடுப்பிட்டி சிவசிதம்பரம் ஆகியோரர் தத்தம் தொகுதிகளுக்கு ஆற்றியுள்ள தொண்டுகளைப் பற்றி இத்தொடரில் சொல்லியிருக்கின்றனர்.

இதே தொடரில் தொடர்ந்து சாவகச்சேரி நவரத்தினம், கிளிநொச்சி கா. பொ. இரத்தினம், வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம், வவனியா சிவசிதம்பரம் ஆகியோரின் பேட்டிக் கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவரும்.

பேட்டி: **- கே. துரைரத்தினம் -**

(முன்னாள் பருத்தித்துறை எம். பி,)

**— நிருபர் வி. வ. பழனிப்பிள்ளை —**

நான் பருத்தித்துறை நீதிமன்றத்தில் செய்தி சேகரித்து விட்டு சரியாகப் பிற்பகல் 2 மணியளவில் வல்வையில் உள்ள அவரது 'மோகன வாசம்' என்ற இல்லத்தை அடைந்தேன் அங்கே அவரது இல்லத்துணைவியும் மூத்தமகனும் மிகவும் சுகவீனமுற்ற நிலையில் இருப்பதால் இளைய மகன் என்னை வரவேற்றுன். அப்பா தேர்தல் வேலைக்காக வெளியே சென்றுவிட்டார், உணவருந்த வரும் நேரமாகிறது. அமருங்கள் என்று அழகு தமிழில் கூறினர். நான் நாற்காலியில் அமர்ந்து சொற்ப நேரத்தின் பின் 'அப்பன்' என்று மகனை அழைத்துக் கொண்டு துரை பஸ்ஸால் இறங்கி வீட்டுக்குள்ளே வரவும் நான் எழுந்து வந்த நோக்கத்தைக் கூறவும் சிலநிமிடங்கள் அவகாசம் கேட்டார். ஒருசில நிமிடங்களில் வந்ததும் 'ஈழநாடு' தானே? அதற்குப் பேட்டி அளிப்பதென்றல் எனக்குமெத்தச் சந்தோஷம் என்று தமாசாகக் கூறிய வண்ணம் அமர்ந்தார்



தமிழருக்காக தமிழரால் நடத்தப்படும் ஒரே ஒரு தினசரி என்ற முறையில் இராணுவத்தினரின் அட்டூழியங்களையும் வல்வையில் படைவீரர்கள் அடிக்கடி செய்து வரும் சகிக்க முடியாத கொடுமைகளையும் 'ஈழநாடு' சுடச்சுட வெளியிட்டு வந்திருக்கிறது. இராணுவத்தினர் என்னைத் தாககிய போதும், 1967-ம் ஆண்டு வல்வை துப்பாககி கலவர துப்பாககி பிரயோகத்தின் போதும் தாங்கள் என்னுடன் அருகில் நின்றிருககிறீர்கள் தங்கள் மூலம் இந்தப்பேட்டி அளிப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன் என்று அவர் சிரித்துககொண்டே கூறினர்.

மககளுககு என்னைத் தெரியும் எனககும் அவர்களை நன்கு தெரியும் இடையில் வேறு பேர் எதற்கு? என்று அவர் கூறிய வண்ணம் ஆட்சிமன்றத்தில் கடந்த 5 வருடங்களில் சாதித்தது என்ன? என்பதை எடுத்துரைகக ஆரப்பித்தார்.

தமிழரசுக கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை எதிர்ப்பதால் தொகுதிககான வேலைகளை அதிகம் செய்யவில்லையென்று மாற்றுககட்சிககாரர் குற்றம்சாட்டி மககளை ஏமாற்றப் பார்ககிறுர்கள். சாதாரண மககளும் இலேசாகப் பார்த்ததால் நாம் செய்ததாக எதுவும் தென்படுவதில்லை தான். ஆனல் நானும் சரி எங்கள் கட்சி உறுப்பினர்களும்சரி அரசாககத்துடன் ஒட்டி உறவாடியவர்களிலும் பார்கக கூடுதலான பணிகளை தொகுதிககு செய்திருககிறேம் இதை எவருமே மறுகக முடியாது.

குறிப்பாக பாடசாலைககு பணம் ஒதுககும் விடயத்தில் உடுப்பிட்டி தொகுதியிலும் பார்கக 1½மடங்கு மேலதிக பணத்தை எனது தொகுதிககு அரசாங்கத்திகள் காட்டும் ஆதரவின் மூலம் உணர்ந்து கொண்டேன். எனவே மறுமுறை நான் கல்வி இலாகாவிடம் அதிக பணம்பெற இதுதடையாகவிருககும் கடந்த பாராளுமன்ற பிற்பகுதியிலும் பெருமளவு பணம் பாடசாலைகளுக்கு பெற்றேன் உடுத்துறை. நாகர் கோவில் ஆகிய பகுதிகளில் உயர்கல்வி கற்பதற்கு இருந்த வசதிக்குறைவுகளைப் போக்குவதற்காக எனது பதவிக்காலத்தில் இரு மகாவித்தியாலயங்களைத் தோற்றுவித்திருக்கிறேன். வல்வை பெண்கள் பாடசாலை சிவகுருவித்தியாசாலை மற்றும் தொண்டமானறு, செம்பியன் பற்று. பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் பாடசாலையின் அபிவிருத்திக்காக அதிகபணம் ஒதுக்கச் செய்திருக்கின்றேன். தளபாடங்களுக்காக மட்டும் கடந்தவருடம் 50,000 ரூபா ஒதுக்கச் செய்திருக்கிறேன்.

### மீன்பிடியாளர் வீட்டுத்திட்டம்

மீன்பிடியாளர்களின் வீடமைப்புத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மட்டும் ரூபா 5 லட்சம் வரை அரசாங்கம்

பாணத் தொகுதியை விட எனது தொகுதியில் இரண்டு மடங்கு வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. மீன்பிடிவீதிகள் பாலங்கள் முதலான மற்றும் பல காரியங்களை மீனவர்நலன் கருதி செய்வித்திருககின்றேன், இந்த அபிவிருத்திவேலைகளைப்பொறுத்தவரை வருடா வருடம் யாழ்ப்பாணமாவட்டத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட பணம் எனது தொகுதிககு ஒதுக்கப்படடு வந்திருககிறது.

எனது தொகுதியின் கிழககுப்பகுதியில் சமீபகாலத்தில் 3 உபதபால் நிலையங்களைத்திறககச் செய்திருககின்றேன். இவற்றில் சிலவாரங்களுககு முன் திறந்த ஆழியவளை உபதபால் நிலையத்திற்குமட்டும் இன்னும்தொலைபேசித் தொடர்பு கிடைககவில்லை. ஏனைய யாவற்றிக்கும்அககுறை நீககப்படடுவிடடது. கடந்த பாராளுமன்றத் தொடரில் நாகர்கோவில்நெல்லண்டை ஆகிய இடங்களுககு தொலைபேசி இணைப்பு ஏற்படடது பருத்தித்துறை தபால் நிலைய நவீன கடடிடத்திற்கென இரண்டரை லடசம் ரூபா ஒதுககப்படடிருககிறது. வல்வெடடித்துறை ஆஸ்பத்திரி கடடிடத்திற்கு ரூபா 1,60,000 ஒதுககப்படடுள்ளது டாகடர்கள் நர்சுகள், மற்றும்ஊழியர்களின் தொகை கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டிருககிறது. இந்த ஆஸ்பத்திரியை நாம் விரும்பிய படிவிஸ்தரிப்பதற்கு போதிய இடவசதி இல்லாககுறை ஒரு தடையாக இருந்துவருகின்றது.

அல்வாய், திககம் வீதியை பகிரங்க வேலைப்பகுதி பொறுப்பு எடுத்து ரூபா 25,000 ஒதுககி வேலை ஆரம்பிககச் செய்துள்ளேன் வரணி குடத்தனை ஆகிய றேட்டுகளின் அபிவிருத்திககும்ரூபா 25ஆயிரம் வழங்கப்பப்படடுள்ளது.

### போக்குவரத்து விஸ்தரிப்பு

பஸ்போககுவரத்து விஸ்தரிப்பை பொறுத்தவரை பல

குறிப்பிடத்தான் வேண்டும் என்று நின்றேன்.

''தமிழ்மக்கள் எங்கு வாழ்ந்தாலும் சரி அவர்களின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி நான் சிந்திப்பது உண்டு. கஷ்டமான குடும்பத்தில் பிறந்தவன் என்ற அனுபவம் இவ்வாறு எல்லாம் என்னைச் சிந்திக்கத் தூண்டுகிறது. இதன்விளைவாக பொதுவான பல அபிவிருத்திகளுக்கு தூண்டுகோலாக இருந்திருக்கிறேன். ஆயினும் அந்த திட்ங்களைப் பற்றியெல்லாம் வெளியே சொல்லித் திரிவதில்லை. உங்கள் கேள்வி அதுபற்றியதாக இருந்துவிட்டதால் பதில்அளிக்காமல் இருக்கவும்முடியவில்லை.

மேட்டுநில பயிர்ச்செய்கை

பல வருடங்களுக்கு முன் சஞ்சிகை ஒன்றில் ''மேட்டுநில பயிர்ச்செய்கை'' என்ற கட்டுரையைப் படித்தேன். அதன்மூலம் மனதில் பதிந்த எண்ணங்களை வைத்துக் கொண்டு கூடுதலான நிலப்பரப்பில் குறைந்தஅளவு தண்ணீரோடு மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை பயிரிட்டு அதிகவருமானம் பெறலாய் என்பதற்காக இதற்கென ஒரு தனிக்குடியேற்றம் உருவாக்கும் திட்டத்தை அரசாங்கத்திடம் வற்புறுத்தத் தொடங்கினேன். மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் யாழ்ப்பாணக் கமக்காரனுக்கு இருந்து வரும் பரிச்சயம் இதுவிஷயத்தில் அனுசரணையாக இருந்தது. யாழ் மாவட்ட இணைப்புக் கூட்டங்களில் வலியுறுத்தி காணிஅபிவிருத்திமந்திரிடம் தொடர்புகொண்டு விசயத்தை விளக்கி காரியத்தை கைகூடச்செய்வதற்கு 3 வருடங்கள் பிடித்தது, 1965-ம் ஆண்டில் மேற்கண்ட எனது திட்டம் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாகவே 'விசுவமடு' படித்த வாலிபர்திட்டம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது அங்கு குடியேறியுள்ள வாலிபர்களில் பலரும் இப்போது வருடமொன்றுக்கு மிளகாய்ச் செய்கையின் மூலம் மட்டும் ரூபா இருபது ஆயிரத்துக்குமேல் லாபம் பெற்றுவருவது மேடடுநிலப் பயிர்ச்செய்கை பற்றி நான் கொண்ட கருத்துசரியானது என நிரூபித்துவிடடது, இத்திட்டத்தை அடுத்து வவனிக்குளத்திலும், ஒன்று ஆரம்பிக்வேண்டும் என்று பிரஸ்தாபித்தவனும் நானே அதைப்போல் முத்தையன் கட்டிலும் ஆரம்பிக்கப்பட்டது, இவற்றால் இன்று பல நூறு ஏககர் நிலம் பெரும் பயன் அளித்துவருகிறது-

(தொடரும்)

## இன்று லெனின் நூற்றாண்டுதினம்

# லெனின் ஆங்கிலம் கற்றவிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு எடுத்துக் காட்டக் கூடிய அபிப்பிராய சுதந்திரமும் இருக்கிறது, இச் சுதந்திரம் கட்சிகளுக்கு மட்டுமல்லாமல் கட்சி சார்பில்லாமல் நடுவுநிலைமையாய் இருப்பவர்களுக்கும் உண்டு.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கும் பல அரசியல் கட்சிகள் இயங்குகின்றன. இவற்றை ஆதரித்து இவற்றின் கொள்கைகள், நோக்கங்கள், திட்டங்கள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு எடுத்துக்கூறும் பத்திரிகைகளும் இயங்குகின்றன. தனிப்பட்ட முறையில், கட்சி சேர்க்கையில்லாமல், நடுவுநிலைமையாக நின்று செய்திகளையும் கருத்துகளையும் வெளியிடும் சுயேச்சையான பத்திரிகைகளும் இருக்கின்றன.

கட்சிப் பத்திரிகைக்கும் சுயேச்சைப் பத்திரிகைக்குமிடையில் கன வித்தியாசம் இருக்கிறது.

கட்சிப் பத்திரிகை ஒரே ஒரு கட்சியின் கருத்துக்களையே திரும்பத் திரும்ப வெளியிட்டுக் கொண்டிருக்கும்

சுயேச்சைப் பத்திரிகை எல்லா கட்சிகளின் அபிப்பிராயங்களையும் வெளியிடும்.

கட்சிப் பத்திரிகை மற்றக் கட்சிகளைத் தாக்கலாம், வசை கூறலாம், கேலிச் சித்திரங்கள் வரையலாம், அவற்றின் தலைவர்களை நையாண்டி பண்ணலாம், நாக்கு வளைக்கலாம்.

சுயேச்சைப் பத்திரிகை, நடுவுநிலைமையுள்ளதாகையால் அப்படி ஒன்றும் செய்வதில்லை. அதற்கு அந்த 'சுதந்திரம்' கிடையாறு.

'ஈழநாடு' எந்த வகையைச் சேர்ந்ததென்று வாசகப் பெருமக்கள் அறிவார்கள். ஒரு கட்சியையோ, ஒரு தலைவரையோ தாறுமாறாகத் திட்டி, கேலிசெய்து, வசைபாடும் 'நெஞ்சுத் துணிவு' அதற்கில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். அத்துடன் எல்லாக் கட்சிகளின் அபிப்பிராயங்களுக்கும் இடமளித்து செய்திகளையும் கருத்துக்களையும் நெறிபிறழா நடுவுநிலைமையுடன் சீர்தூக்கி பாரபட்சமின்றி வெளியிடும் 'நேர்மைத் திறன்' அதற்கு நிறைய உண்டு என்பதையும், எவரும் சொல்லிக்காட்டா

ரித்து. வாசகர்களின் அபிப்பிராயத்தை உருவாக்க உதவி புரிவதே பத்திரிகைகளின் பணியாயிருக்கவேண்டும். அதுவே ஜனநாயகப் பண்பு.

இப்பணியை இன்றுவரை 'ஈழநாடு' திரிகரண சுத்தியுடன் நிறைவேற்றி வருகின்றது.

அது 'தமிழினத்திற்காக வாதாடி வரும் ஒரேயொரு தமிழ்த் தினசரி' அது தமிழினத்தின் ஒரு சாராருக்காக மட்டும் வாதாடவில்லை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் திக அச்சிட்டு வெளியிடப்பட்டது

போதும் தாங்கள் என்னுடன் அருகில் நின்றிருக்கிறீர்கள் தங்கள் மூலம் இந்தப்பேட்டி அளிப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன் என்று அவர் சிரித்துக்கொண்டே கூறினார்.

### தனிமையாகக் 'கன்வசிங்'

கன்வசிங்குககு தனிமையாகப் போய்விட்டு வருகிறீர்கள்போலத் தெரிகிறது என்று நான் பீடிகையாகக குறிப்பிட்டபோது தொகுதி

முடியாது.

குறிப்பாக பாடசாலைககு பணம் ஒதுககும் விடயத்தில் உடுப்பிட்டி தொகுதியிலும் பார்கக 1 1/2 மடங்கு மேலதிக பணத்தை எனது தொகுதிககு அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ளேன். இன்ன இன்ன பாடசாலைககு இவ்வளவு என்ற விபரத்தை இங்கு கூற விரும்பவில்லை. ஏனென்றால் மககள் திரும்பவும் இதே பணியை என்னிடம் தரத்தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்

### மீன்பிடியாளர் வீட்டுத்திட்டம்

மீன்பிடியாளர்களின் வீடடுத்திட்டங்களைநிறைவேற்றுவதற்காக மட்டும் ரூபா 5 லட்சம் வரை அரசாங்கம் செலவிடச் செய்திருக்கிறேன். 250 வீடுகள் கட்டி முடிக்கபடடுள்ளன. இந்த வீடுகளை நேரகாலத்திற்கு கட்டி முடித்திருந்தால் இன்னும் இரண்டு மடங்குபணம் ஒதுக்கச் செய்யாதிருக்கலாம். இதுவிடயத்தில்யாழ்ப்

கும்ரூபா 25ஆயிரம் வழங்கப்பப்பட்டுள்ளது.

### போக்குவரத்து விஸ்தரிப்பு

பஸ்போககுவரத்து விஸ்தரிப்பை பொறுத்தவரை பல காரியங்களைசாதிகக கூடியதாகவிருந்தது. நான் தூண்டி ஆரம்பிககச் செய்த தெரண்டமாறு- திருககோணமலை, பருத்தித்துறை நாயாறு ஆகிய பஸ்சேவைகள் பருத்தித்துறை டிப்போவுககு அதிக வருமானத்தை கொடுத்து வருகின்றன

இப்படி சொல்லிக கொண்டுபோன திரு. துரைரத்தினம் திடீரென நிறுத்திவிட்டு என்முகத்தைப்பார்த்துச் சிரித்தார். தொடருங்கள் தொடருங்கள் என நான் உற்சாகம் ஊட்டினேன். இன்னும் அநேகம் சொல்வதற்குஉண்டு யாவற்றையும் எப்படிப் பெற்று எனது தொகுதியின் அபிவிருத்திககாக இயலுமான அளவுககு உழைத்து வருகிறேன் என்ற விருத்தாந்தங்களை சுயவிளம்பர நோககில் நான் சொல்லவிரும்பவில்லை அது மட்டுமல்லாமல்ல காரியங்களை சாதித்த விவகாரங்களை எடுத்துக கூறினேனுக விருந்தால் அடுத்தபாராளுமன்றத் தொடரில் எனது தொகுதிமககளுககு சேவை செய்வது கஷ்டமாகி விடும் என கூறினுர்.

பொதுத் தேர்தலைமனதில் வைத்து நான் எந்த முயற்சியையும் செய்யவில்லை. இருந்தாலும் எங்கள் நிலை கம்பங் கூத்தாடியின் நிலையைப்போன்றது. கம்பத்தின் உச்சியிலே நின்று கூத்தாடினுலும் இரசிகரிடம் பணம் வாங்குவதற்காக கீழே இறங்கி வந்துதானே ஆகவேண்டும். நான் செய்தது சில செய்யவேண்டியவை பலவுண்டு. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இனத்துக்காக இலட்சியம், கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் பெரிதும் உழைத்தாலும் சாதாரணமான சின்ன விடயங்களைப் பற்றியும் தொகுதிக்கு பெற்றுக் கொடுத்த சலுகைகளைப் பற்றியும் சொல்லவேண்டித்தான் இருக்கிறது.

எனது தொகுதியை மட்டுமல்ல தமிழ் பிரதேசத்தையே பொதுவாக மனதில் வைத்து அதன் அபிவிருத்திக்காக சிந்தனையைச் செலுத்திவருகிறேன் என்று கூறிய திரு. துரைரத்தினத்திடம் இடைமறித்த நான் அப்படியானுல் தாங்கள் தமிழ்ப்பிரதேசத்தின் பொதுநன்மை கருதி எடுத்துக்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும்

## கற்றவிதம்



1903ல் லெனினும், குருப்ஸ்காயாவும் லண்டனை வந்து சேர்ந்ததும் தங்கள் ஆங்கில அறிவினை மேம்படுத்திககொள்வதில் மும்முரமாய் மூழ்கினுர்கள் முககியமாக ஆங்கிலப்பேச்சு மொழியினைக கற்றுக கொள்ளுவதிலேயே அவர்களுககு ஆர்வம் அதிகமாயிருந்தது ஏனெனில் லெனினுககும், குருப்ஸ்காயாவுககும் பேச்சு மொழியைப் புரிந்துகொள்ளுவதே சிரமமான சங்கதியாய்ப்பபட்டது

''சைபீரியாவில் இருககும் போது பெரிய ஆங்கிலப் புத்தகமொன்றினை ரஷ்ய மொழியில் பெயர்த்துவிடடோமென்பதனுல் எங்களுககு ஆங்கிலம் நன்ருகவே தெரியும் என்ற எண்ணத்தில் இருந்தோம் சிறையிலிருந்த தருணம் சுயபோதினியொன்றின் துணைகொண்டு ஆங்கிலத்தை நான் கற்றேன் ஆனுல் ஆங்கிலப்பேச்சு மொழியின் ஒரு வாத்தையேனும் என் காதில் படடதில்லை வேப்வின் நூலை நாங்கள் சைபீரியாவில் மொழிபெயர்க்க ஆரம்பித்தபோது என்னுடைய ஆங்கில வார்த்தை உச்சரிப்புகள் விளாடிமிருககு எரிச்சலூடடுவனவாயே இருந்தன நான் இலிபிச்சுடன் எவ்வித வாதங்களிலும் இறங்காது மீண்டும் மீண்டும் ஆங்கிலத்தைக கற்றேன். நாங்கள் லண்டனை வந்தடைந்தபோது எங்களால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை நாங்கள் பேசுவதும் மற்றவர்களுககுப் புரியவில்லை. மிகவும் வேடிககையான சூழலில் நாம் இருந்தோம் இந்த நிலை விளாடிமிர் இலியச்சுககு எரிச்சலூடடியது அவர் தமது ஆங்கில அறிவை மேம்படுத்துவதில் மும்முரமாய் இறங்கினுர்'' என்று ஓரிடத்தில் குருப்ஸ்காயா எழுதுகிறுர்

லெனின் பொது வாசிகசாலையில் கீழ்ககண்ட விளம்பரத்தினை போடடார்

ஒரு ரஷ்ய எல் எல் டியும், அவரது மனைவியாரும் ஆங்கில கனவான் ஒருவருடன் ரஷ்ய, ஆங்கில பாடங்களைப் பரஸ்பரம் பரிமாறிக கொள்ள விரும்புகின்றனர் திரு ஜே றிச்சர், 30, ஹொல் போர்ட சதுகம், பென்டோன்விலி, டபிள் யூ சி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

விரைவில் லெனினும், குருப்ஸ்காயாவும் மூன்று ஆசிரிய - மாணவர்களுடன் தொடர்பு கொண்டுவிடடனர் இவர்களில் ஒருவர் ஏறத்தாழ டார்வினின் தோற்றத்தை ஒத்தவரான திரு றேமன்ட ஆவர் அவர் ஜோர்ஜ் பெல் அன்ட சன் பிரசுராலயத்தில் பணிபுரிந்து வந்தார் இரண்டாமவர் வில்லியம்ஸ் என்ற அலுவலக ஊழியர் மற்றவர் தொழிலாளியான திரு யங் என்பவர்

# அனைத்துயிரிலும் தன்னைக்கண்ட அறவோன் இலக்கணச் சுவாமிகள் இன்று அவர் பரிபூரணமடைந்த திருநாள்

— மயிலை. சிவ. சண்முகதாசன் —

உயிரின வளர்ச்சியோடு ஆன்மீக வளர்ச்சியும் தொடர்ந்துகொண்டே வருகிறது. பௌதிக வளர்ச்சியால் மட்டும் மனிதன் வளர்ந்துவிடவில்லை. ஆன்மீகவளர்ச்சியும் மனித உள்ளத்தில் ஏற்படும் பேதங்களை நீக்கி, அறியாமை இருளைப் போக்கி, அன்பெனும் ஒளியில் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி, பிணைத்து மனதிற்கு சாந்தியை அளிக்கிறது. அந்த சாந்தி நிலையில் தான் உன்னதமான மதங்களெல்லாம் நிலைத்திருக்கின்றன. மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

அனைத்துயிர்களிலும் தன்னையும், தன்னில் அனைத்துயிரையும் காண்கின்ற பேரறிவாளர்கள் மதத்தால் வளர்ந்து, மதத்தை வளப்படுத்தி வந்திருக்கின்றனர். இப்படி மதத்தையும் மனிதத்தன்மையையும் மாண்புறச் செய்த பெரியார் இலக்கண சுவாமிகள் ஆவர், மெலிந்த உடல், அன்பும் அறிவும் கண்களில் விளங்க, கருணைமுகத்தில் துலங்க வீற்றிருக்கும் சுவாமிகளின் தோற்றம், வள்ளுவன் இலக்கணத்திற்குக கிடைத்த இலககியமாய் விளங்குவதைக காணமுடியும்.

அப்பர்சுவாமிகளின் அடிச்சுவட்டில் நடந்து அவர் பரிபூரணமடைந்த அதே நாளில் இவரும் பரிபூரணமடைந்தார். மனத்துக்கண் மாசிலனுய், அனைத்துயிர் மீதும் அன்புகொண்டு செந்தன்மை பூண்டொழுகிய இப்பெரியார் பரிபூரணம் அடைந்தநாள் இன்று சுவாமிகள் துறவுக்கு ஓர் எல்லையாக விளங்கியவர். சூரியனுர் கோவில் ஆதீனத்தில் ஞானகுரவராக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக பரமாசாரியரிடம் ஞானநூல்கல்வி, சைவசந்நியாசம், சமயம் சிறப்பு நிர்வாணம் விசேஷ நிர்வாணம் ஆகிய தீட்சைகள் பெற்று அந்தத்திருப்படத்தின் பரிபாலன சிறப்புக்கு காரணமாக இருந்தார்கள்

வடமொழி கலைக்கண்டுணர்ந்தவர் இப்பெரியார் வடமொழியிலுள்ள சைவஞான நூல்களை தமிழில் பெயர்த்தெழுதி, சூரியனுர் கோவில் ஆதீனத்தார் செம்மையாக வெளியிடுவதற்கும்இலக்கண சுவாமிகளே காரணமாவார் அதுமட்டுமல்ல, சிவஞான பாடியம், சிவாக்ரபாஷ்ய, சந்நியாச பத்ததி இன்னும் இவைபோன்ற பல நூல்கள் வடமொழியில், இவர்கள் மேற்பார்வையில் அச்சாகி வெளிவந்தன. தருமபுரம் ஆதீன முனிவர்களில் ஒருவராக இருந்த வெள்ளி அம்பலவாண தம்பிரான், சிவஞான சித்தியாருக்கு சிவாகமங்களிலும், அஷ்டபிரகரணம் முதலிய வழிநூல்களிலும், உபநிடதங்களிலும் மேற்கோள்காட்டி எழுதிய 'ஞானவர்ணபாடியம்' என்னும் சிறப்பான நூலை ஆராய்ந்து செப்பனிட்டு வெளியிட, தருமை ஆதீன மகாசந்நிதானம் இவர்களையே தெரிந்



தெடுத்தார்களென்ருல் சுவாமிகளின் ஆற்றலின் பெருமை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

படித்தவர் பண்புள்ளவர் சிறியோராயினும் பெரியோராயினும் எவரிடத்தும் சமமாகப் பழகியவர். சித்தாந்த நுட்பங்களை கேட்பார் வேட்ப இனிய சொல்லில்தெளிவாகச் சொல்வதில் வல்லவர். நித்திய கர்மானுஷ்டானங்களையும், சிவபூசையையும் கணமும் மறந்தறியார்.

16-வது வயதில் யாழ்ப்பாணத்தைவிட்டு தமிழகம் சென்று சிதம்பரத்தில் வாழ்ந்த சுவாமிகள் அங்கு மடம் அமைத்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி அந்தப் புனிதமண்ணிலேயே அடக்கமானுர்.

அவர் பிறந்துவாழ்ந்த மண்ணிலேயே 'ஈழநாடு' மலர்ந்திருக்கிறது அவர்களது வழித்தோன்றல்களால் முத்துக்குமாரதம்பிரான் சுவாமிகள் என்னும் ஸ்ரீஇலக்கண சுவாமிகளின் அருள் நெறியையும், துறவு நெறியையும் அகத்தூய்மையையும் அன்புகொண்டு இறைவனைநாடி நிற்பவர்களால்தான்முற்ருக அறிந்துகொள்ள முடியும் அந்தப்புனிதன் பாதம் போற்றி, அவர் ஆசிகொண்டு நம்வாழ்வை வளமுறச்செய்வோம். சைவம்வளர, தமிழ் மொழி மலர அவர் ஆசி என்றும் துணைபுரியும்

இவரது குருபூசைத்தினம் தமிழ் சித்திரைமாசம் 16-ந் திகதி புதன்கிழமை (29-4-70) கொண்டாடப் படும்.

——

## ஒத்துழைக்...

(1-ம் பககத் தொடர்சி)

இதில் கலந்து கொண்டனர்

திரு துரையப்பா மைதானத்தை வந்தடைந்ததும் முஸ்லிம் மாணவிகளால் வாழ்த்துரை பாடப்பட்டது

ஜனுப் எம். எஸ். மாதர் இக கூடடத்தில் பேசுகையில் திரு துரையப்பா ஏழைகளுககுத் தொண்டு செய்யக கூடியவர் என்று குறிப்பிடடார், ஜனுப் சி ஏ காதர் உடபடப் பலர் பேசினர்,

(குவிம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org